www.tamilarangam.net


# களத்தில்




எமது தாயக தேசத்தின் விடுதலைக் காக ஆயிரமாயிரம் புலி வீரர்கள் களமாடி விழ்ந்தார்கள். எமது வீர மண்ணின் மார்பைப் பிளந்து அந்த வீரர்களைப் புதைத்தோம். உயிரற்ற சடலங்களாக அவர்கள் மண்ணிற்குள் மறையவில்லை. விடுதலையின் விதைகளாகவே எமது தாயின் மடியில் அவர்களைப் புதைத்தோம். வரலாற்றுத் தாய் அவர்களை அரவணைத் துக்கொண்டாள்.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*


(09.12.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (199) அன்பளிப்பு : 60 p


# தமிழீழம் வரலாற்றின் குழந்தையாக விரைவில் பிறப்பெடுக்கும்!

- மக்கள் போராக வளர்ச்சியும் எழுச்சியும் பெற்றுள்ளது!
- இராணுவச் சமநிலை எமக்கு சார்பாக திரும்பியுள்ளது!

*- தமிழீழத் தேசியத் தலைவர் மாவீரர்நாள் பிரகடனம்-*

*“இந்தப் புதுயுகம் எமக்குச் சொந்தமானது. இப் புதுயுகத்தில் எமது மக்களின் நெடுங்கால கனவு நிறைவுபெறும். இத்தனை காலமும் எமது மக்களைப் பீடித்து நின்ற துன்பமும் துயரமும் அகன்று எமது மக்களுக்கு விடிவு கிட்டும். எந்த இலட்சியத்திற்காக எமது மாவீரர்கள் போராடி மடிந்தார்களோ அந்தப் புனித இலட்சியம் இப்புதுயுகத்தில் நிறைவுபெறும்” என தமிழீழத் தேசியத் தலைவர் மாவீரர் நாளையொட்டி புலிகளின் குரல் வானொலி ஊடாக மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார்.*

*இவ் உரையானது புகலிட நாடுகளில் வானொலிகள் ஊடாக ஒலிபரப்பப்பட்டதுடன் உரையின் ஆங்கில, தமிழ் பிரதிகள் உலகம் பூராவும் வழங்கப்பட்டது.*


*ஒப்பற்ற இராணுவ வெற்றியின் சிகரத்தில் நின்றவாறு இன்று மாவீரர் உரையை ஆற்றுகின்றேன் என உரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட தேசியத் தலைவர் இவ் இராணுவ சாதனையின் விஸ்வரூபம் கண்டு எதிரிமட்டுமல்ல எதிரிக்கு பக்கபலமாக நின்று பயிற்சியும் ஆயுதமும் பணஉதவியும் வழங்கிய உலகநாடுகள் மலைத்துப் போய்நிற்கின்றன எனச் சுட்டிக்காட்டினார்.*

*இப் போர் ஒரு நிலமீட்புப் போர் என வர்ணித்த தேசியத் தலைவர் இன்று மக்கள் போராக இது வளர்ச்சி கண்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.*

*சிங்கள அரசின் சமாதான முகமூடிகளை கிழித்தெறிந்து சந்திரிகா அரசின் ஆட்சியை சாபக்கேடு என சுட்டிக்காட்டிய இவ் மாவீரர் உரை சந்திரிகா அரசு இரகசியமாக பேச முற்பட்டமையை கடுமையாகச் சாடியது.*

*இன்று இராணுவச் சமநிலை எமக்கு சார்பாக திரும்பியுள்ளது. ஆயுத பலம், ஆட்பலம், ஆன்மபலம், மக்கள் பலம் என்ற ரீதியில் எமது தாயகத்தை மீட்கும் சக்தி எம்மிடம் உண்டு எனத் தேசியத் தலைவர் தன் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த உரையில் தெரிவித்துள்ளார்.*

*(உரையின் முழுமையையும் 6ம், 7ம்பக்களில் காண்க)*



## போர்க் கைதிகள் விடுதலை

*ஓயாத அலைகள் நடவடிக்கையின் போது எமது போராளிகளிடம் சரணடைந்த சிங்களப் படையினர் இரு கட்டங்களாக விடுவிக்கப் பட்டுள்ளனர். 26.11.99 அன்று 7 படையினர் விடுவிக்கப்பட்டுள்ளனர். 06.12.99 அன்று மேலும் இரு படையினர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.*

*இவர்கள் அனைவரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக தத்தம் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சிறீலங்காவின் பல் வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதும் சர்வதேச போர் விதிகளுக்கு அமைய சரணடைந்த போது எமது போராளிகளால் மனிதாபிமானத்துடன் பராமரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

## திருமலையில் இராணுவமுகாம் அழிப்பு!

*திருகோணமலையில் அமைக்கப்பட்டிருந்த சிறீலங்கா இராணுவ முகாமொன்று எமது போரளிகளினால் தாக்கி அழிக்கப்பட்டது. சில மணிநேரம் இடம் பெற்ற இச் சமரில் 09 கடற்படையினரும் 1 பொலிசாரும் கொல்லப்பட்டதுடன் பலர் காயங்களுடன் தப்பியோடினர். ஏராளமான ஆயுதங்கள் எமது போராளிகளினால் கைப்பற்றப்பட்டது. கப்டன் கேசவன் (குலதிலகராசா சிறீதரன் யாழ்ப்பாணம்) இச்சமரில் வீரச்சாவடைந்துள்ளார்*

*இதேவேளையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நாவலடி சந்திப்பகுதியில் 3 சிறீலாங்காப் படையினர் எமது போராளிகளினால் அழிக்கப்பட்டனர். இராணுவமுகாமில் இருந்து 200 மீற்றர் தொலைவில் வைத்து இத்தாக்குதல் நடாத்தப் பட்டுள்ளது.*

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.tamilarangam.net



# உலகெல்லாம் தமிழரெழுச்சி



வரலாறு காணாத பேரெழுச்சியில் உலகெங்கும் தமிழர்கள் திளைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆயுதப் படைபலம் கொண்டு சந்திரிகா வன்னி நிலப்பரப்பில் இரண்டரை ஆண்டுகளாக இராணுவ நடவடிக்கைகள் மூலம் ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொடுத்துக் கட்டிய ஆக்கிரமிப்புக் கோட்டை ஓயாதஅலைகள் 3இல் கடற்கரை ஓரத்து மணல் வீடு போல கரைந்து போயுள்ளது. தமிழ் மக்களை இன அழிப்பு செய்து அதில் சிங்களவர்களைக் குடியேற்றிய மணலாறு பிரதேசத்தின் பெரும்பகுதி மீட்கப்பட்டு காட்சியளிக்கிறது. மன்னாரில் நூற்றுக் கணக்கான கிராமங்கள் விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டு ஐம்பது ஆண்டு கால தள்ளாடி இராணுவ முகாம் தள்ளாடிய காட்சியை உலகு கண்டு கொண்டது. வுவனியா எப்போது விழுமென்றோ அல்லது எந்தநேரத்தில் எந்த முகாம் எங்கே விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியுறும் என்றோ சொல்லமுடியாத நிலையில் சிறீலங்கா திகைத்துத் தடுமாறிக் கொண்டிருக்கிறது. தங்கள் தேசிய விடுதலை இயக்கமாம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மிகக் குறுகிய காலத்தில் மிக மிக குறைந்த இழப்புக்களுடன் ஈட்டிய இந்த மகத்தான வெற்றிகளைக் கண்டு உலகத் தமிழினம் இறும்பூதெய்தி நிற்கின்றது. இந்த மகிழ்ச்சி அலையின் பிரவாகத்தை உலகத் தலைநகரங்களில் தமிழீழப் புலம்பெயர் மக்கள் மாவீரர் நாளன்று தம் மாவீரர்களுக்கு எடுத்த பெருவிழாக்களில் உலகு கண்டு கொண்டது. கடலலைபோல் மக்கள் வெள்ளம் மாவீரர் நாள் நினைவு நிகழ்ச்சிகளை நிறைத்தன. அலை அலையாக மக்கள் மனமுவந்து மாவீரர் நாள் நிதியத்திற்கு பணமாகவும் நகைகளாகவும் அள்ளிச் சொரிந்த காட்சிகள் தாயகப்பற்றின் எழுச்சியை உலகிற்கு படம் பிடித்துக் காட்டின. தம் தாயக விடுதலைக்காக தம் தாலிக் கொடிகளையே தமிழ்ப் பெண்கள் கழற்றிப் போட்ட தியாக காட்சிகள், தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் மக்களால் எவ்வளவு தூரத்திற்கு உயர்வாகப் போற்றப்படுகின்றது என்பதற்கு சாட்சிகளாக வரலாற்றில் பதிவாகின.

ஆட்பலமும் ஆயுதபலமும் ஆன்மீகபலமும் மக்கட்பலமும் கொண்ட எமது தாயகத்தை நாமே விடுவிக்கக் கூடிய வல்லமைமிக்க சக்தியாக நாம் இலங்குகின்றோம் என்று எங்கள் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் மாவீரர் நினைவுரையில் குறிப்பிட்டமைக்கு புலம்பெயர் தமிழீழ மக்களின் 1999ஆம் ஆண்டுக்கான மாவீரர் நாள் பங்கெடுப்புக்களும் பங்களிப்புக்களும் சான்று பகர்ந்துள்ளன.

இந்த புலம்யெர் மக்களின் தாயக உணர்வுகளை வருடிவிடும் வார்த்தைகளாக இலண்டன் மாவீரர் நாள் நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நிகழ்த்திய சிறப்புரை அமைந்தது. ஆட்பலமும் ஆயுதபலமும் ஆன்மீகபலமும் மக்கட்பலமும் கொண்டு தாயகத்தை தாமே விடுவிக்கக் கூடிய இராணுவ ஆற்றலுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று விளங்கிய போதிலும் இரத்த ஆறுகளையும் உயிரழிவுகளையும் தடுக்கும் வண்ணம் நாகரீக வழிகளில் அமைதியான முறைகளில் இப் பிரச்சினைக்கான தீர்வினை ஏற்படுத்த தாம் சமாதானத்துக்கான பாதையினை கைவிடவில்லை என தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் ஆணித்தரமாக விளக்கியதை அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தமது பேச்சில் வலியுறுத்தினார். அமைதிப் பேச்சுக்கள் யுத்தத்தினால் மக்கள் துடி துடித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலைகளில் இராணுவ ஆக்கிரமிப்புக்களாலும் அபகரிப்புக்களாலும் பொருளாதாரத் தடைகளாலும் தமிழ் மக்கள் சொல்லொணா வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இடம்பெற முடியாது. யுத்தம் நிறுத்தப்பட்டு தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கின்ற படைகள் விலக்கப்பட்டு தமிழ் மக்கள் மேல் விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடைகள் இல்லாத இயல்பு நிலை மக்கள் வாழ்வுக்காக உருவாக்கப்படுதல் பேச்சுவார்த்தைக்கு அவசியம் எனத் தேசத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் அடித்துக் கூறியதை அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எளிமையான தமிழில் கவர்ச்சிகரமான முறையில் மக்களுக்கு விளக்கிப் பேசினார்.


சிங்கள பௌத்த பேரினவாதத்தில் வளர்ச்சி பெற்றுள்ள இரண்டு சிங்களக் கட்சிகளும் இப் பிரச்சினைக்கு தீர்வு காணா என்பதை விளக்கிய அவர் மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்தின் தேவையை விளக்கிய அவர் சந்திரிகா இரகசியமாகப் பேசுவதற்கு வரும்படி விடுத்த அழைப்புக்களை விளக்கி மக்களுடைய போராட்டத்தை மக்களுக்கு தெரியாத முறையில் பேசி தீர்க்க முடியாது என்பதை மிக அழகாக விளக்கினார்.

தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் புலம்பெயர் தமிழீழ மக்களின் மகோன்னதமான பங்களிப்புக்களுக்கு எல்லாம் தனது நன்றியைத் தன்னிடம் தெரிவித்து அதை மக்களுக்கு எடுத்துக் கூறும்படி தம்மிடம் கூறியதாக அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கூறியதும் தலைவரின் பாராட்டுதல்கள் தந்த உற்சாகத்தில் இலண்டனின் பிரமாண்டமான இலண்டன் அரீனா மண்டபத்தை நிறைத்திருந்த மக்கள் செய்த கரவொலி தேசத் தலைவனின் சுண்டு விரல் கட்டளைக்கு ஏங்கிக் கிடக்கும் சமுதாயமாக தமிழீழத் தேசமக்கள் அவர்கள் வாழும் இடமெல்லாம் இலங்குவதை உலகிற்கு வெளிப்படுத்தியது.

தேசத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் தமது மாவீரர் நாள் நினைவு உரையில் எங்கள் மக்கள் இன்று இந்த விடுதலைப் போராட்டத்தின் நோக்கத்தையும் தேவையையும் விளங்கியுள்ளனர். தங்கள் நிலங்களையும் அந்த நிலங்களினால் தாங்கள் பெற்ற வாழ்வையும் இழந்து வேதனைகளில் தவிக்கும் மக்கள் தங்கள் சொந்தத் தாயகத்தின் முக்கியத்துவத்தை உணர்கின்றனர். அவர்கள் எங்கள் எல்லைகளை ஊடுருவி எம் மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் அந்நியப் படைகளை விரட்டியடிக்க வேண்டிய தேவையை நன்கு உணர்கின்றனர். இதனால் எமது மக்களில் பெரும்பான்மையானவர்கள் இந்த தாயகத்தை மீட்கும் விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றியும் பேராதரவுகள் கொடுத்தும் வருகின்றனர். இன்று எங்கள் விடுதலைப் போராட்டம் மக்கள் விடுதலைப் போராட்டமாக உயர்நிலை பெற்றுள்ளது.

எனக்கூறிய வார்த்தைகளின் வடிவமாக பேரெழுச்சியால் உந்தப்பட்டுள்ள தமிழர்கள் உலகின் தலைநகரங்களில் மாவீரர்களுக்கு எடுத்துள்ள தேசிய விழாக்கள் விளங்கி மாவீரர் தினம் விடுதலை பெற்ற தேசத்தின் தேசியத் திருவிழாவாக பெருவிழாக் காணும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்பதை உலகிற்கு உறுதி செய்துள்ளன.

■ ■ ■




## மாவீரர்களே



*எதிரிகளின் பாசறையை தேடிப் போகிறோம்*
*தமிழ் ஈழமண்ணை மீட்டெடுக்க ஓடிப் போகிறோம்*
*இது அன்று ஒலித்த கானம்*
*இன்று அடி அடியாக மீட்டுக்கொண்டு*
*முன்னேறுகிறார்கள் நம் மண்ணின் மைந்தர்கள்*
*இவர்களுக்கு அந்த தைரியத்தை வழங்கியவர்கள்*
*இவர்களுக்கு முன்னால் சென்று தம் இனிய உயிரை*
*தமிழ்ஈழ மண்ணுக்காக தியாகம் செய்த*
*மாவீரர்கள்!*
*இவர்கள் காலத்தால் அழியாத நட்சத்திரங்கள்*
*வானில் நட்சத்திரங்கள் மின்னுவது போல்*
*என்றும் தமிழ்ஈழ மக்களின் நெஞ்சங்களில்*
*மின்னிக்கொண்டே இருப்பார்கள்.*
*தமிழே தாய் தமிழ்ஈழமே தாய் நாடு*
*என்ற இலட்சியத்தை கடைப்பிடிக்கும் தமிழ்ஈழத்*
*தேசியத் தலைவரின் வழிகாட்டலில் செல்லும் வேங்கைகளே*
*தமிழன் என்று மார்தட்டி சொல்லும் உலகத்தமிழர்கள்*
*எல்லோருக்கும் நீங்கள் மாவீரர்கள்.*

*- சிவயோகன் சண்முகநாதன்-*



| | | | | | |
|---|---|---|---|---|---|
| AUSTRALIA<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | CANADA<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | DENMARK<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | FRANCE<br>TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | GERMANY<br>TCG<br>Postfach 340251,<br>51624 Gummersbach. | ITALY<br>TCC<br>Via Vinsenzo Di Pavia No14,<br>90138 Paterno. |
| NETHERLANDS<br>TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | NORWAY<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | SWITZERLAND<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | SWEDEN<br>TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | UNITED KINGDOM<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | U.S.A<br>W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இங்கிலாந்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களின் சிறப்புரை

இலண்டன் மாநகரில், தமிழீழ தேசிய மாவீரர்நாள் கடந்த 27.11.1999 அன்று நடைபெற்றது. தாயகத்தில் இருந்து வந்து தற்போது இலண்டனில் தங்கியுள்ள, விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் சிறப்புரை ஆற்றினார். இலண்டன் வருகைதந்ததன் பின் பொது மக்கள் மத்தியில் அவர் தோன்றி உரை யாற்றிய முதலாவது நிகழ்ச்சி இதுவாகும். சுமார் ஒருமணிநேரமாக, நகைச்சுவை ததும்ப, இனிமையாகவும் சுவையாகவும் விரிவாகவும் அவர் ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகளை இங்கு பிரசுரிக்கின் றோம்.

## சமாதானப்பேச்சுவார்த்தை குறித்து...

தலைவர் ஒவ்வொரு ஆண்டும் மாவீரர் நாள் உரைநிகழ்த்தும்போதும் சமாதானத் துக்கான அழைப்பை விடுகிறார். தலைவர் சமாதானத்துக்கு விடுகிற அழைப்பை அரசாங்கம் நிராகரித்து வருகுது.

சென்ற ஆண்டும் தலைவர் அவர்கள் சமாதானத்துக்கான ஒரு அழைப்பை விடுத்தார். நீங்கள் வாசிச்சிருப்பியள். அத்தோட சர்வதேச மத்தியஸ்தத்துடன், மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு தயார் என்று சொன்னார். அதை ஏன் சொன்னார் எண்டு சொன்னா... நேரடியாக சிங்களவ னோட பேசிப் பிரயோசனம் இல்லை. இவையளை நம்பமுடியாது. நாங்கள் நீண்டகாலமாக.. நாங்கள் மாத்திரமல்ல.. எங்களுக்கு முந்திய காலகட்டத்திலிருந்த தலைவர்கள் கடந்த ஐம்பது வருசமாக பேசிக்கொண்டுதான் இருக்கினம். முடி வில்லாத ஒரு தொடர்கதையாக... இந்த பேச்சுவார்த்தை நடந்துகொண்டே இருக் குது. ஆனால் சிங்களவன் எங்களுக்கு எந்தவிதமான ஒரு உரிமையையும் தரத் தயாராகயில்லை. ஆகவே இவையளோட இனி நேரடியாகப் பேசிப் பிரயோசனம் இல்லை. ஒரு சர்வதேசநாடு, அல்லது ஒரு சர்வதேச நிறுவனம்... எண்ட ரீதியில... ஒரு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தோட பேசுவம் எண்டு தலைவர் அறிவிச்சார்.


## பேச்சுவார்த்தைக்குமுன்னர் அதற்கான சூழ்நிலை உருவாக்கவேண்டும்.

சமாதானப்பேச்சுவார்த்தைக்கு... ஒரு சமாதானப்புறநிலை இருக்கவேணும். ஒரு இயல்புநிலை.. அது முக்கியம். அந்த இயல்புநிலை என்று சொன்னால்... போர் ஓய்ந்த ஓர்நிலை. எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கிற சிங்கள இராணுவம் எமது மண்ணில் இருந்து வெளியேறிய ஒரு இயல்புநிலை. எமது மக்கள் மீது திணிக்கப்பட்ட பொருளாதார அழுத்தங் கள் நீங்கிய நிலை. இப்படியான ஒரு இயல்பு நிலையிலதான் பேசுவன் என்று தலைவர் அழுத்தம் திருத்தமாக சொல்லி யிருக்கிறார்.

## சந்திரிகாவும் இரகசியபேச்சுவார்த்தையும்..

மூன்றாந்தரப்பு எண்டுசொல்லி எங்க ளுக்கு தொடர்பு ஏற்பட்டதுதான். ஆயர் கள் மூலமாக செய்திவரும். பேந்து ஒரு தடவை இந்த கொமன்வெல்த் செக்கிர ற்ரறி ஜெனரல் மூலமாகவும் ஒரு செய்தி வந்தது. பேந்து ஒருதடவை இந்த நோர்வே அரசாங்கம்மூலமாக சந்திரிகா எங்களுக்கு ஒரு செய்தி அனுப்பியிரு ந்தார். என்ன செய்தி எண்டால்... பேசுவம். எப்படி பேசுவம்..? இரகசிகமாக பேச வேணும். ஒருத்தருக்கும் தெரியாமல்பேச வேணும். அதாவது எங்காவது ஒரு நாட்டிலபோய்... என்ர அமைச்சரவை க்கும் தெரியக்கூடாது. என்ர இராணுவத் துக்கும் தெரியக்கூடாது. உங்கட தமிழ் மக்களுக்கும் தெரியக்கூடாது. நாங்கள் போய் இரகசிகமாகப்பேசி.. ஒரு முடிவுக்கு வருவம். இந்தப் பேச்சு மூன்று மாதத்து க்குமேல நீடிக்கக்கூடாது.

அதுக்கு நாங்கள் மறுத்தம். ஏன் மறுத்தம்? நாங்கள் இரகசிகமாகப் பேச விரும்பவில்லை. பேச்சுவார்த்தை என்றால்... அதிகாரபூர்வமானதாக... பகிரங்கமான தாக... நடக்கவேணும். இந்த இரகசிகமாக மசவாசாக விசயங்களை நடத்துறது அவவுக்கு பழக்கப்பட்ட விசயமாக இருக்கும்... ஆனால் எங்களுக்குத்



தெரியாது. நாங்கள் அப்படிப்போய் இரகசிகமாய் ஒண்டும் செய்யமுடியாது. எங்கட போராட்ட நிலைமைபற்றி எங்கட மக்களுக்கு தெரியவேணும். நாங்கள் என்ன பேசிறம் எண்டு எங்கட மக்களுக்கு தெரியவேணும். எங்கட கோரிக்கைகள் என்ன? நாங்கள் என்ன விசயங்களை முன்வைத்து பேசுறம் எண்டு எங்கட மக்களுக்கு தெரியவேணும். ஏன் எண் டால்... இது ஒரு மக்கள் போராட்டம். இது எங்களுக்கும் சந்திரிகாவுக்கும் மத்தி யிலுள்ள ஒரு தனிப்பட்ட பிஸ்னஸ் டீலிங் இல்லை.

மற்றது.... போரை ஒருபுறம் நடத்திக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்த வேணுமாம். அது முடியாத காரியம். என்னண்டு பேசுறது. அங்க நீ சனங்க ளுக்கு மேல செல் அடிக்கிறாய். குண்டு அடிக்கிறாய். எங்கட சனம் சாகுது. பெரிய சாவும் அழிவும் அவலங்களுமாக எங்கட மக்கள் இரத்தக்கண்ணீர் வடிச்சுக் கொண்டிருக்க... நாங்கள் இஞ்ச வந்து.. ஒரு வெளிநாட்டில ஒரு கொட்டலில இருந்துகொண்டு... இரகசிகமாக சந்தோச மாக கைகொடுத்து பேசுவதற்கு முடியுமா..?

முதலில நீ.. யுத்தத்தை நிறுத்து. இராணுவ அட்டூழியங்களை, கொடுமை யளை நிறுத்து. பொருளாதாரத் தடைகளை அகற்று. படையெடுப்புக்களை நிறுத்து. ஆக்கிரமிச்ச பகுதிகளில இருந்து நீ படையளை வெளியேற்று. யாழ்ப்பாணத்தில இருந்து மட்டக்களப்பில இருந்து படையள் வெளியேறவேணும். இல்லாட்டி நாங்கள் வெளியேற்றிப்போட்டுத்தான் உன்னோட பேசுவம்.

## சந்திரிகாவும் சமாதானமும்.

சந்திரிகாவின்ர சமரச முயற்சி, சமாதான முயற்சியில.. ஒரு உண்மையுமில்லை. உதாரணத்துக்கு ஒரு விசயத்தைச் சொல்லுறன். சில மாதத்திற்கு முன்னர் எனக்கு திடீரென சுகயீனம் ஏற்பட்டது. என்ர சிறுநீரகங்கள் செயலிழந்து போச்சு. சாகிற தறுவாய். அப்ப.. நாங்கள் எங்களு க்குத் தெரிந்த வெளிநாட்டு ராஜதந்திரி கள் மூலமாக இந்தப் பிரச்சினையைச் சொன்னம். தலைவர் அறிவிச்சார்... பாலாஅண்ணைக்கு சுகமில்லை. வெளி நாட்டுக்கு எடுத்துக் கொண்டுபோய் ரீட்மென்ட் செய்யவேணும் எண்டு. அப்ப.. வெளிநாட்டு அரசாங்கங்கள்... பிரிட்டிஸ் கவர்மென்ட், நோர்வே கவர்மென்ட், ஐ.சி.ஆர்.சி. இவையள் எல்லாம் போய் சந்திரிகாவிட்டையும்.. கதிர்காமரிட்டையும் போய் கதைச்சினம். என்ன கதைச்சினம்... மிஸ்ரர் பாலசிங்கம் ஒரு முக்கியமான ஆள். அதுவும் பேச்சுவார்த்தைக்கு முக்கி யமான ஆள். இவர் செத்தார் என்றால் பேச்சுவார்த்தையே இனி நடக்காது. ஆகவே இவரை வெளிநாட்டுக்கு கொண்டு போங்கோ... அதற்கான வசதி செய்யுங்கோ. செய்துவிட்டு... அவரைச் சுகப்படுத்தி னாப்போல... பேச்சுக்கு அவரைப் பாவிக்கலாம் எண்டு சொல்லிச்சினம்.

**போர் ஓய்ந்த ஓர்நிலை. எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கிற சிங்கள இராணுவம் எமது மண்ணில் இருந்து வெளியேறிய ஒரு இயல்புநிலை. எமது மக்கள் மீது திணிக்கப்பட்ட பொருளாதார அழுத்தங்கள் நீங்கிய நிலை.**

அப்ப சந்திரிகாவும் கதிர்காமரும் பிரபாகரனுக்கு நிபந்தனை விதிச்சினம். என்ன.. நிபந்தனை..? யாழ்ப்பாணத்தின்மீது தாக்குதலை நிறுத்தவேணும். அங்கே இருக்கிற சிவில் நிர்வாகத்தை குழப்பக் கூடாது. கடலால இராணுவத்துக்கு கொண்டுவாற சப்ளையை தடுக்கக் கூடாது.

இப்பிடிச்சொல்லி... என்ர வருத்தத் தோட சம்பந்தமில்லாத ஐந்து ஆறு டிமாண்டுகள். பிரபாகரனுக்கு கோபம் வந்திட்டுது. பிரபாகரன் சொன்னார்.. இவையளை நம்பத் தேவையில்லை. உங்களை நான், எங்கட கடல்பாதை மூலமா அனுப்பிவைக்கிறன் எண்டார்.

இதுல நீங்கள் கவனிக்கவேண்டிய விசயம் என்னெண்டால்.. ஒரு சாகக் கிடக்கிற மனுசனுக்கு.. அதுவும் பேச்சு வார்த்தைக்கு முக்கியமான மனுசனுக்கு... பிரபாகரன் பத்து இராணுவத்தினரை விடுதலை செய்து நல்லெண்ண சமிக்சை செய்துதான் கேட்டார்...

அப்படியிருக்க... அந்தச் சின்ன உதவியை செய்யாத நீ... தமிழ்மக்களின்ர பிரச்சினையைத் தீர்ப்பியா..?

## பலம்வாய்ந்த நிலையிலும் சமாதான அழைப்பு.

இப்ப நாங்கள் பலம்வாய்ந்த சக்தியாக நிக்கிறம். எங்களிட்ட ஆட்பலம் இருக்கு, ஆயுதபலம் இருக்கு, ஆன்ம பலம் இருக்கு, மக்கள் பலம் இருக்கு.. அதாவது எங்கட மண்ணை மீட்டெடுக்கிற சகல பலத்தோடையும் நாங்கள் நிக்கிறம். அப்படியிருந்தும்... நாங்கள் அந்த சமாதா னக்கதவை இன்னும் மூடேல்லை எண்டு தலைவர் சொல்லுறார். ஆனால் அதையும் அப்படி சொல்லிப்போட்டு... சொல்லுறார் நாங்கள் சமாதானத்துக்குத் தயார்.. ஆனால் அதுக்கு ஒரு சமாதான சூழ்நிலை தேவை எண்டு.

எங்களுக்குத் தெரியும் அங்க இரண்டு முக்கிய கட்சிகள் இருக்கு. இந்த இரண்டு கட்சிகளுமே பேரினவாதக் கட்சிகள். இரண்டும் சிங்கள பௌத்த பேரினவாத சித்தாந்தத்தில் ஊறித்திளைத்த கட்சிகள் எண்டு சொல்லுறார் தலைவர்.

ஐம்பது ஆண்டுகால ஒடுக்குமுறை வரலாற்றை எடுத்துப்பார்த்தால் அதில இந்த சந்திரிகாவின்ர ஆட்சிக்காலம் மிகவும் கொடூரமான ஒடுக்குமுறைக் காலம்.

ஆகவே தலைவர் சொல்லுறார்.. சந்திரிகாவை நான் நம்பேல்ல.. நம்ப முடியாது. எண்டாலும் பேசுவம். அதுக்குத் தான் நாங்கள் மூன்றாந்தரப்பு மத்தியத் துவம் வேணும் எண்டு கேட்டுக்கொண்டு இருக்கிறம்.

ஏன் கேட்கிறம் எண்டால்... சிங்கள வங்கள் தமிழ்மக்களுக்கு உருப்படியா எதுவும் கொடுக்கமாட்டாங்கள் எண்டு இந்த மேற்குலகத்தாக்களுக்கு நிருபிச்சுக் காட்டவேணும. அதற்காகத்தான்.

## சிங்களத்தின் தேர்தலும் எமது நிலைப்பாடும்.

விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு இதுதான். சிறீலங்காஅரசியல் அமைப்பில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. இந்த சிறீலங்கா அரசியல் அமைப்பு... அது அதிகாரம் உள்ள சனாதிபதியின்ர ஆட்சியோ, அல்லது பாரர்ளுமன்றமோ


(தொடர்ச்சி 4-ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## உலகமுள்ளவரையும் உனக்கு வயது

ஜயநின் மேனியின் மேனியின் அழகதும்;நெஞ்சினில்
அடர்ந்துள வீரத்தின் அழகும்,
அன்னைமண் தன்னையுன் ஆயிரம் கரங்களால்
அரவணைக் கின்ற பேரழகும்,
வெய்யவர் கண்டுநீ வெகுண்டெழும் போதினில்
விரிகின்ற கோபத்தின் அழகும்,
விடுதலைக் கானநேர் வீதியை என்றுமே
விட்டறி யாதநின் அழகும்,
பொய்யறி வின்றியே போரறிவோடெமைப்
புலியென நிமிர்த்திய அழகும்,
புவியினில் இன்றுள தமிழரின் வாயெல்லாம்
பேசிடும் உன்பெயர் அழகும்
வையகம் உள்ளள வாகும்; அதுவரை
வயதுனக் காகுக அழகா.
வாயெடுத் தாயிரம் வாழ்த்துரைத்தோம்; தமிழ்
வாசலில் வாழுக தலைவா.

-புதுவை இரத்தினதுரை-

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

## இங்கிலாந்தில் நடைபெற்ற மாவீரர் நாள்...

மாறி மாறி இவையின்ர ஆட்சி நடந்துகொண்டிருக்கும். இந்த ஆட்சி யமைப்பில தமிழ்மக்கள் பங்கு கொள்ளுறதாலையோ... அல்லது இந்த ஆட்சியமைப்பின் அதிகார பீடங்களாலேயோ எங்களுக்கு ஒரு விடிவும் வந்துவிடப்போவதில்லை. அப்ப.. நாங்கள் ஏன் இதைப்பற்றி அலட்டிக்கொள்ளுவான். ஏன் நாங்கள் மக்களுக்கு அதைச்சொல்லுவான். அவருக்கு வோட் பண்ணு... இவருக்கு வோட் பண்ணாத எண்டு... அப்பிடி எங்கட மரபிலையே இல்லையே...

### ஓயாதஅலைகள் மூன்றும் தமிழர்பூமியும்.

வன்னியின்ர பெரும்பகுதி மீட்கப் பட்டிருக்கு. ஒருசில பகுதி எல்லை யோரமாக இருக்கலாம். ஆனால் எல்லைக்குக்கொண்டுபோய் தள்ளிவிட்டிருக்கிறம் சிங்களவனை. மற்றது இஞ்சால மணலாற்றுக்குள்ள இறங்கி... ஒரு பெரும் பிரதேசத்தை பிடிச்சிருக்கிறம். ஆனால் இப்ப நீங்கள் நினைக்கக்கூடாது ஓயாத அலைகள் ஓய்ஞ்சுபோச்சுதெண்டு.

### போற்றப்படவேண்டியவர் தலைவர்.

தலைவர் போராளிகளுப் பாராட்டுத் தெரிவிச்சிருக்கிறார். படைநடத்து கையை மேற்கொண்ட தளபதிகளுக்கு பாராட்டுத் தெரிவிச்சிருக்கிறார். இத்தச் சண்டைகளில உதவிசெய்த பெருந் தொகையான பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்திருக்கிறார். ஆனால், இதில பாராட்டப்படவேண்டியவர் உண்மை யில தலைவர்தான். தாக்குதல் பயிற்சி கடந்த ஒருவருடமாக நடந்தது. போராளிகளுக்கு நல்லவிதமாய் பயிற்சிகள் கொடுத்து வளர்த்து வைத்திருந்தார். திட்டங்கள் எல்லாம் நல்லவிதமாய் நுணுக்கமாய் தீட்டி, சண்டையை வழிநடத்தியவர் அவர் தான்.

### வெளியார்தலையீடு வருமா..?

மக்களுக்கு சில அச்சமும் இருக்கு. யாராவது வந்து தலையைப் போட்டு குழப்பிப்போடுவாங்களோ என்று. அமெரிக்கா தலையிடுமா? ஐ.நா.சபை தலையிடுமா என்று? இந்தியா தலையிடுமா? எண்டு சொல்லி... மக்கள் மத்தியில அச்சம் பயம் இருக்கு. இதில வந்து.. அந்நிய தலையீடுகள் வந்து நிகழுறதுக்கு சந்தர்ப்பமே இல்லை. ஒண்டுவந்து சிங்களவனின்ர வெளிவிவகாரக் கொள்கை. கதிர்காமற்ற ராஜதந்திர சாணக்கியம். என்ன..? அவர் என்ன சொல்லிக்கொண்டு திரிந்தவர் இவ் வளவுநாளும். இது ஒரு உள்நாட்டுப் பிரச்சினை, ஒருதரும் வரக்கூடாது. இதுக்குள்ள வந்து எங்களுக்கு வெளி நாட்டு மத்தியஸ்தமும் வேண்டாம் ஒண்டும் வேண்டாம். நாங்கள் பேசித் தீர்ப்பம் எண்டுசொன்னார். ஐ.நா. சபை போய் நுளம்படிக்கட்டும் இங்கவரத்தேவையில்லை எண்டு சொல்லிப்போட்டு... இப்பபோய் உதவி கேட்டா.. ஏலாது ஐயா. போகமுடியுமா..? அடிச்சுக்கலைப் பாங்கள்.

சிறீலங்காவுக்கு உதவி செய்த நாடுகள், சந்திரிகாவின்ர பெட்டகத்தில தீர்விருக்கெண்டும், புலியளை வெண்டு வடக்கு கிழக்கை தங்கட கட்டுப் பாட்டுக்க கொண்டுவந்து பிரச்சி னையை ஒற்றையாட்சிக்குக்கீழ தீர்ப்பா எண்டு நம்பினவை. ஆனா இப்ப திகைச்சுப்போட்டினம். இப்ப என்ன திகைப்பு எண்டால் விடுதலைப் புலிகளை யாரும் வெல்ல முடியாது. அமெரிக்காகூட இதுக்குள்ள வந்து காலை வைக்கப் பயப்பிடும். அவ் வளவு போர்ஆற்றல் உள்ள ஒரு போராளி இயக்கம். இந்தியாவந்து முன்பு காலைவச்சு பட்டபாடு இந்தியாவுக்குத் தெரியும்.

### இந்தியா எங்கட நேசசக்தி.

எங்களுக்கு முக்கியமான ஆக்கள் யார் எண்டால் இந்தியாதான். இந்தியா வைப்பற்றித்தான் நாங்கள் அக்கறைப் படவேணும். இந்தியாவுக்கும் எங்களு க்கும் நீண்டஒரு தொடர்பு இருக்கு. பல முரண்பாடு வந்தது. மோதல்கள் ஏற்பட்டது. யுத்தமாக வெடித்தது. ஆனால் இந்தியா என்றும் எங்கட நேசசக்திதான். ராஜீவ்காந்தியின்ர இந்திரா காங்கிரஸ் கட்சியின்ர ஆட்சியில.. அவையளின்ர தவறான வெளிவிவகாரக் கொள்கையாலதான் இந்தப்பிரச்சினையெல்லாம் ஏற்பட்டது. இப்ப அவையளே உணர்ந்து கொள்ளுகினம். நாங்கள் ஏன் ஐயா இந்தியாவோட போய் மோதப்போறம். எங்களுக்கென்ன பயித்தியமே...? நீதானே எங்களோட வந்து மோதினாய். நாங்கள் எங்கட மக்கள் சுதந்திரத்துக்காக போராடுறம். எங்கட மக்கள் அப்பாவிமக்கள். அவையள் உங்கள காலங்காலமாக கடவுள் மாதிரி போற்றிக்கொண்டு இருக்க... நீ துன்புறுத்தி, அடிமைப் படுத்தி, கொடுமைப்படுத்தி, கொன்று.. இப்பிடி யெல்லாம் செய்தனீ அல்லவா. அது நீ விட்ட தவறு. அது நடந்துபோன தவறாக இருக்கட்டும். அதைப்பற்றி நாங்கள் இப்ப எடுக்கேல்ல. இப்ப இந்தியாவில பி.ஜே.பி. அரசு வந்திருக்கு. அதில எங்களுக்கு சாதகமான கட்சியளும் இருக்குது. தமிழ் நாட்டிலயும் சாதகமான சூழ்நிலை இருக்குது. எமது மக்கள்மீது அனு தாபங்கொண்ட அரசியல் இயக் கங்கள் இந்தியாவில இருக்குது. எடுத்த எடுப்பில சிங்களவரை ஆதரிச்சு.. சிங்களவருக்காக இந்தியா இறங்கத் தயாராகயில்லை.

### இந்தியாவின் சந்தேகம்.

எங்கட விடுதலைப்போராட்டம் தொடர்பாக இந்தியாவக்கு சில சந்தேகங்கள் இருக்கு. பயங்கள் இருக்கு. இந்த பயங்கள், சந்தேகங் களை நிவர்த்தி செய்யிறதுக்காக நாங்கள் முயற்சி செய்துகொண்டிருக் கிறம். என்ன சந்தேகமெண்டால்.. விடுதலைப் புலிகள் அமைப்பு இந்திய அரசியலில் தலையிடுமா எண்ட சந்தேகம். நாங்கள் இந்திய உள் நாட்டு அரசியலில் எந்தக்காரணம் கொண்டும் தலையிடமாட்டோம். தேவையும் இல்லை எங்களுக்கு. இந்தியாவின்ர தேசிய நலன் களுக்கோ.. இந்தியாவின்ர அரசியல் புவியியல் நலன்களுக்கு மாறாக நாங்கள்ஒருநாளும் செயல்ப்படப் போவதில்லை. தமிழ்த் தேசியவாதம் தமிழ்நாட்டில பரவி தனிநாடு உருவாகும் என்றொருபயம்.. அதுவும் அர்த்தமற்ற ஒரு அச்சம். ■

www.tamilarangam.net



# புலிகளின் போராலையால் சிதைந்த சந்திரிகாவின் தேர்தல்கால இரணுவக் கனவுகள்

ஓயாதஅலைகள் மூன்று இராணுவ நடவடிக்கை இன்னமும் ஓய வில்லை. அது ஆர்ப்பரித்தபடி, தன் இலக்குகள் நோக்கி முன்னேறி வருகின்றது. அதன் இலக்குகள்தான் என்ன? என்ற கேள்விக்கு விடைசொல்ல வல்லார் இந்த இராணுவ அதிசயத்தை திட்டமிட்டு வழிநடத்திவரும் தலைவர் மட்டுமே.

கடந்த மாதத்தின் நடுப்பகுதியில், வவுனியா வீழ்ந்துவிடும் வீழ்த்தப் பட்டுவிடும் என்ற பாரிய ஊகங்களுக்கு மத்தியில், மன்னாரின் பெரும் பகுதியை ஓயாத அலைகள் மூன்று இராணுவ நடவடிக்கை, தனக்கே உரித்தான வேகத்துடனும் தீவிரத் துடனும் மீட்டெடுத்தது.

**கத்தியின்றி, இரத்தமின்றி நடக்கின்ற யுத்தம்போல, விடுதலைப் புலிகளின் இராணுவ மேலாதிக்கத்தை உணர்ந்துகொண்டு, ஆக்கிரமிப்பைக் கைவிட்டு நகர்ந்து தமது சொந்த இடங்களுக்குச் சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் செல்ல, தமிழர்பிரதேசம் தமிழ்மக்களின் கைகளுக்கே மீளவந்துசேர்கின்றன.**

வவுனியா மன்னார் வீதிக்கு வடபுறத்தே அநேகமாக எல்லாப் பகுதிகளையும் விடுதலைப் புலிகள் மீட்டெடுத்துள்ளனர்.

மறுபுறத்தே, அதிமுக்கியத்துவம் வாய்ந்த மணலாற்றில் பெரும் பகுதியும், விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன. ஆக்கிரமித்துக்கொண்ட இராணுவத்தினரும், திட்டமிட்டு குடியேற்றப்பட்ட குடியேற்றவாசிகளும், விடுதலைப் புலிகளின் இராணுவபலம் கண்டே, தமது ஆக்கிரமிப்புப்பகுதி களைவிட்டு பல இடங்களில் வெளி யேறியிருக்கின்றனர். இப்பகுதியில், ஆறுக்கும் மேற்பட்ட இராணுவ முகாம் கள் விடுதலைப் புலிகளால் தாக்கி யழிக்கப்பட்டவுடன், சிங்களஇராணுவ ஆக்கிரமிப்பு முகாமை பாதுகாத்த படியும், தமது பாதுகாப்பிற்கு இராணுவ முகாம்களை நம்பியிருந்தபடியும், தமிழர் நிலங்களை அனுபவித்துக் கொண்டிருந்த சிங்களக்குடியேற்றவாசி களும் இயல்பாகவே, இங்கிருந்து வெளியேறிச்சென்றுள்ளனர்.

கத்தியின்றி, இரத்தமின்றி நடக்கின்ற யுத்தம்போல, விடுதலைப் புலிகளின் இராணுவ மேலாதிக்கத்தை உணர்ந்து கொண்டு, ஆக்கிரமிப்பைக் கைவிட்டு நகர்ந்து தமது சொந்த இடங்களுக்குச் சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் செல்ல, தமிழர்பிரதேசம் தமிழ்மக்களின் கை களுக்கே மீளவந்துசேர்கின்றன.

சிங்களப்பேரினவாதத்திற்கு தலைமைதாங்கி, தமிழின அழிப்பை தீவிரப்படுத்தி, அதற்கொரு சட்ட அங்கீகாரம் வழங்கி, அதனை தலைமை யேற்று நடத்திய முன்னாள் சிறீலங்கா சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா, இந்த மணலாற்று சிங்களக்குடியேற்றத் திட்டத்தை மேற்கொண்டார்.

வடக்கு கிழக்கை பிரித்து, தொடர்பு கள் அற்ற இரு பிரதேசங்கள் ஆக்கு வதன்மூலம் தமிழர் தாயகத்தை துண்டித்து, அதன் ஒருமித்த உணர் வையும் விடுதலை வேட்கையையும் இல்லாதொழித்துவிடலாம் என்பதும், இயல்பாக முரண்பாடுகளை ஏற்படுத்தி இரு பிரதேசங்களையும், தனது கையில் வைத்திருக்கலாம் என்பதும் சிங்களப் பேரினவாதியான ஜெயவர்த்தனாவின் சூழ்ச்சிகர நாசகாரத்திட்டம்.

1984ம் ஆண்டிலிருந்து, இப்பகுதி யில் சிங்களக் குடியேற்றங்கள் மேற் கொள்ளப்பட்டன. மணலாறு என்ற தமிழர்களின் பிரதேசம், வெலியோயா என, சிங்களத்தால் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. மிகக்குறுகிய காலத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள், தமது நிலங்களில் இருந்து பல வந்தமாக வெளியேற்றப்பட்டனர். அங்கு சிங்கள முகாம்கள் நிறுவப்பட்டன, சிங்களஆட்சியாளர்களால் அனைத்து வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டு, சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர்.

இவையாவும், எதிரியின் நிலப் பரப்பை ஊடுருவிச்சென்று, அதனைக் கைப்பற்றும் படைநகர்த்துகை போல, ஒரு இராணுவச் செயற்பாடுபோலவே நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப் பட்டன.

இதனை எதிர்த்து முன்னைய தமிழ்தலைவர்கள் குரலெழுப்பினார்

சுப்பு

கள், போராட்டங்கள் நடத்தினர், மேடைபோட்டு பிரச்சாரம் செய்தனர். என்றபோதும் பலன் எதுவும் கிடைக்க வில்லை. வெறும் கை முழமிடாது என்பதுபோல எதுவுமே நடைபெற வில்லை. ஆனால், சிங்களக் குடியேற்றமோ மிகத்தீவிரமடைந்தது. தமிழர்களின் இதயபூமியான மணலாற் றில், சிங்களக்குடியேற்றம் பரவி விரவி தன்னை வலுப்படுத்தியது.

ஆக்கிரமிக்கப்பட்ட இப்பெரும் பிரதேசத்தின் அநேகபகுதிகள் இன்று, விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டு ள்ளன. சிங்கள இராணுவம் இன்று தனது சிங்களப்பகுதிகளைக் காக்கும் முயற்சிகளில் தீவிரமாய் ஈடுபட்டுள்ளது. அநுராதபுரத்திற்குக்கூட விடுதலைப் புலிகள் வருவார்களோ என்ற அச்சம் சிங்களப்படையினர் மத்தியில் சிங்கள மக்கள் மத்தியிலும் இருக்கவே செய்கின்றது.

சிங்களப்படைத் தலைமையும் பாது காப்புப்படையினரும் சிங்களப்பகுதி களில் உள்ள தமது படைமுகாம்களின் பாதுகாப்புக்குறித்து தீவிரஏற்பாடுகளை மேற்கொள்ளுகின்றனர். விடுதலைப் புலிகளின் படையணிகள் முன்னேறி வராதபடி, தடைகளை ஏற்படுத்து கின்றனர். இந்த அளவில்தான் இன்றைய சிங்கள இராணுவத்தின் மனோபலமும் படைநிலையும் உள்ளது.

இராணுவச்சமபலத்தில் ஏற்பட்டுள்ள இத்திடீர் மாற்றத்திற்கு, ஓயாத அலைகள் மூன்றே காரணம் என்றால் அது மிகையில்லை.

வன்னியில், சிங்களம் பெற்ற அவமானகரமான தோல்வி சிங்கள த்தை ஆவேசப்படுத்தியதின் விளைவே, நூற்றாண்டுகால பழைமையும் வரலாற்று புகழ்மிக்கதுமான மடுமாதா ஆலயத் தின் மீதான தாக்குதலாக மாறியது. சிங்களம் தனது இயலாமையை, கொடுமையான பழிவாங்கலாக நிகழ்த் தியது. சிங்களப்படையால் மேற்கொள்ளப் பட்டுவரும் இராணுவ நடவடிக்கை காரணமாக, இடம்பெயர்ந்து மடு மாதாஆலயத்தில் தங்கியிருந்த பொது மக்களில் முப்பத்தியேழுபேரை அவ் விடத்திலேயே கொன்று, அறுபதுக்கும் மேற்பட்டோரை படுகாயப்படுத்தியது.

மடுமாதா ஆலயப்பகுதி விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டிருந்தபோதும், கத்தோலிக்க திருச்சபையினதும், மடு மாதா ஆலயநிர்வாகத்தினதும் நிலைப் பாட்டுடன் ஒத்துப்போய், அதற்கு உரிய மரியாதை கொடுக்கும் வகையில், விடுதலைப் புலிகள் செயற்பட்டனர். மடுத்தேவாலயத்தின் புனிதத்தைக் கடைப்பிடிக்கும் நோக்கில் தலைவரின் பணிப்புரைக்கு ஏற்ப, இராணுவத்தை அப்பகுதியில் இருந்து விரட்டிய விடுதலைப் புலிகள், அங்கு காப் பரண்கள் எதனையும் அமைக்க வில்லை. அங்கு தமது நிலைகள் எதனையும் அமைக்காமல், அங்கிருந்து தொலைவிலேயே தமது நிலைகளை அமைத்திருந்தனர். இதனை அறிந்து, தமக்கு வாய்பான சூழ்நிலையாகக் கருதிக்கொண்டு, இரவோடு இரவாக, அப்பகுதிக்குள் கவசவாகனங்கள் பீரங்கிகளுடன் நுளைந்து சிங்களப் படை, மனிதநாகரீகத்திற்கு சவால் விடும் இத்தகு கீழ்த்தரமான செயற் பாட்டைப் புரிந்து, தனது பௌத்த சிங்களப் பேரினவாத நிலைப் பாட்டையும், மனித விழுமியங்களுக்கு சவால்விடும் தனது கட்டற்ற வெறித்தனத்தையும் நிரூபித்துக் காட்டியிருக்கின்றது.

இதில் இன்னுமொரு கொடுமை நிகழ்ந்தது என்னவென்றால், இதனை விடுதலைப் புலிகளின் தலையில் கட்டிவிட சிங்களம் முயன்றதுதான். சிறீலங்காப் பாதுகாப்பமைச்சகம் இரவோடிரவாக அறிக்கை தயாரித்து, வெளிஉலகை நம்பவைக்க பெரு முயற்சி எடுத்தது. சந்திரிகாவும் இது விடுதலைப் புலிகளின் வேலையே என, நாகூசாமல் பொய்யுரைத்தார். அத்துடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கொடுக்கப்போவதாகவும், அறிவித்தார். இதில் இருந்து, ஒன்றை இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. அது என்னவென்றால், மடுமாதா ஆலயத்தின்மீதான தாக்குதலும் பொது மக்கள் படுகொலையும், முப்படை களினதும் தளபதி சந்திரிகாவினதும், பிரதிப்பாதுகாப்பமைச்சர் ரத்வத்தை யினதும் திட்டமிட்ட நாசகார நடவடிக் கையே என்பதே.

இராணுவத்தினரின் வெறும் பழி வாங்கல் நடவடிக்கை என்பதற்கப்பால், திட்டமிட்ட பிரச்சாரம் ஒன்றிற்கு தோதாகவும் இக்கொடுமை நிகழ்த்தப் பட்டிருப்பதாகவே உணரப்படுகின்றது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர் நாள் (99) உரை

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே,

இன்றைய நாள் எமது தேசத்து விடுதலை வீரர்களின் நினைவு நாள்.

தாயக விடுதலையைத் தமது உயிரிலும் மேலாக நேசித்து, அந்த இலட்சியத்திற்காகப் போராடி மடிந்த எமது தேசத்தின் சுதந்திர வீரர்களை இன்று நாம் எமது இதயத்துக் கோயில்களில் சுடரேற்றிக் கௌரவிக்கிறோம்.

எமது தாயக தேசத்தின் விடுதலைக்காக ஆயிரமாயிரம் புலி வீரர்கள் களமாடி வீழ்ந்தார்கள். எமது வீர மண்ணின் மார்பைப் பிளந்து அந்த வீரர்களைப் புதைத்தோம். உயிரற்ற சடலங்களாக அவர்கள் மண்ணிற்குள் மறையவில்லை. விடுதலையின் விதைகளாகவே எமது தாயின் மடியில் அவர்களைப் புதைத்தோம். வரலாற்றுத் தாய் அவர்களை அரவணைத்துக்கொண்டாள். ஆயிரமாயிரம் தனிமனித உயிர்கள் சரித்திரத்தின் கருவூலத்தில் சங்கமித்தன. அவ்வுயிர்கள் கருவாகி, காலத்தால் உருவம் பெற்று, தேசத்தின் சுதந்திரமாக வடிவம் பெற்றுவருகிறது. தமிழீழம் என்ற அந்தச் சுதந்திர தேசம் வரலாற்றின் குழந்தையாக விரைவில் பிறப்பெடுக்கும். அந்த சுதந்திர தேசத்தின் ஆன்மாவாக, ஆளுமையாக எமது மாவீரர்கள் என்றும் எம்முடன் நிலைத்து வாழ்வார்கள்.

எமது வீர விடுதலை வரலாற்றின் ஒரு முக்கிய திருப்புமுனையில் நின்றவாறு இன்று எமது மாவீரர்களை நாம் நினைவுகொள்கிறோம்.

எமக்கு முன்னால், கால விரிப்பில், ஒரு புதுயுகம் எமக்காகக் காத்துநிற்கிறது. எமக்குப் பின்னால், கடந்த காலத்தில், இரத்தம் தோய்ந்த விடுதலை வரலாறு நீண்டு செல்கிறது. மானிடத்தின் விடுதலைக்காக மாபெரும் தியாகங்கள் புரிந்த வரலாற்றுப் பெருமையுடன், எமது விடுதலை இயக்கம் பிறக்கப்போகும் புதுயுகத்தில் காலடி வைக்கிறது.



இப் புதுயுகம் எமக்குச் சொந்தமானது. அநீதியையும் அடக்குமுறையையும் எதிர்த்து நீதிக்கும் சுதந்திரத்திற்குமாகப் போராடிய மக்களுக்குச் சொந்தமானது. இப் புதுயுகத்தில், எமது மக்களின் நெடுங்காலக்கனவு நிறைவு பெறும். இத்தனை காலமும் எமது மக்களைப் பீடித்த துன்பமும் துயரமும் அகன்று எமது மக்களுக்கு விடிவு பிறக்கும். எமது மண்ணுக்கு விடுதலை கிட்டும். எந்த இலட்சியத்திற்காக எமது மாவீரர்கள் போராடி மடிந்தார்களோ அந்தப் புனித இலட்சியம் இப் புதுயுகத்தில் நிறைவு பெறும்.

ஒப்பற்ற மாபெரும் இராணுவ வெற்றியின் சிகரத்தில் நின்றவாறு, இன்று நான் மாவீரர் நினைவுரையை நிகழ்த்துகிறேன்.

இந்த மகத்தான இராணுவ வெற்றி முழு உலகத்தையும் வியப்பிலும் திகைப்பிலும் ஆழ்த்தியிருக்கிறது. இது ஒரு சாதாரண போரியல் சாதனையல்ல. போரியற் கலையின் ஒரு ஒப்பற்ற உலக சாதனையாகவே இவ்வெற்றி கருதப்படும். இந்த வெற்றியின் விஸ்வரூபப் பரிமாணம் கண்ட எமது எதிரி மட்டுமல்ல, எதிரிக்குப் பக்கபலமாக நின்று, பயிற்சியும், ஆயுதமும் பண உதவியும் வழங்கி வந்த உலக நாடுகளும் மலைத்துப் போய் நிற்கின்றன. 'ஓயாத அலைகள் மூன்றாக' க் குமுறிய இப் பெருஞ்சமர் ஒரு சில நாட்களில் இமாலய சாதனையைப் படைத்தது.

முழுப்பலத்தையும் ஒன்று குவித்து, பெரும் படையெடுப்புக்களை நடாத்தி வருடங்களாக, மாதங்களாக தொடர் சமர்களை நிகழ்த்தி, ஆயிரக்கணக்கில் உயிர்ப் பலி கொடுத்து சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருந்த வன்னியின் வளமிகு பகுதிகளை எமது வீரர்கள் கடுகதி வேகத்தில் மீட்டெடுத்தனர். வன்னிமண்ணில் அகலக் காலூன்றிய எதிரி தொடர்வலையமாக நிறுவிய படைத்தளங்களும் கட்டளைப்பீடங்களும், இரும்புக் கோட்டைகளாக அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களும், மிகக்குறுகிய காலத்தில், மிகக்கூடிய வேகத்தில் புலிகளிடம் வீழ்ச்சியடைந்த அற்புதம், உலகத்தின் புருவத்தை உயர்த்தியது. வன்னியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பழம் பெரும் பட்டினங்களிலிருந்து எதிரி இராணுவம் விரட்டப்பட்டது. அங்கெல்லாம் இப்பொழுது புலிக்கொடி மார்தட்டி பெருமையுடன் பறக்கிறது. காட்டுத் தீயாகப் பரவிய இப் பெருஞ்சமரில் எமது தாயகத்தின் இதய பூமியான மணலாற்றின் ஒரு பகுதி மீட்கப்பட்டதையிட்டு நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். காலம் காலமாகத் தமிழர் வாழ்ந்த இப்புனித மண்ணைச் சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து, தமிழர்களைக் கொன்றழித்து, அங்கு சிங்களக் குடியேற்றங்களை நிறுவிய சோக வரலாற்றினை எமது மக்கள் நன்கறிவர். வடக்கையும் கிழக்கையும் புவியியல் ரீதியாக இணைத்து, வன்னியின் மிகச் செழிப்பான நிலங்களைக் கொண்ட எமது தேசத்தின் இதயபூமி மீண்டும் எமது கட்டுப்பாட்டில் வந்துகொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். இந்த மண் மீட்பு எமது போராட்ட வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தைச் சுட்டுகிறது.

போரியற் கலையில் புலிப்படை வீரர்களின் அபாரமான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் இந்த 'ஓயாத அலைகள்' மூன்று என்ற வன்னிப் பெரும்சமர் உலகத்திற்கு நிரூபித்துக்காட்டியிருக்கிறது. எமது படையணிகளின் சமரிடும் வேகமும் வீச்சும், குலையாத கூட்டுச் செயற்பாடும், துரித கெதியில் படை நகர்த்தும் ஆற்றலும், எதிர்த்துத் தாக்கும் உத்திகளும், அபாரமான துணிவும், நேர்த்தியான கட்டுப்பாடும் உலக இராணுவ நிபுணர்களை வியக்கச்செய்து வருகிறது.

இந்த வரலாற்றுச் சமரில் களமாடி வீர சாதனை படைத்த சகல போராளிகளுக்கும், படை நகர்த்திய தளபதிகளுக்கும், இச்சமரில் பங்குகொண்டு போராடிய எல்லைக் காப்புப் படையணியினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள். இந்தப் பெருஞ்சமரில் எமது போராளிகளுக்கு ஊக்கமளித்து, உணவளித்து, இரத்தமளித்து, பின் களவேலைகளில் உதவிபுரிந்து பெரும் பங்காற்றிய தமிழீழ மக்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றி.

நில மீட்பிற்காகவே இந்தப் போர் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

தமிழீழம் எமக்குச் சொந்தமான நிலம். வரலாற்று ரீதியாக எமக்கு உரித்தான நிலம். எமது வாழ்விற்கும் வளத்திற்கும் ஆதாரமான நிலம் நாம் பிறந்து, வாழ்ந்து, வளர்ந்த நிலம். எமது தேசிய அடையாளத்திற்கு அடித்தளமான நிலம் இந்த நிலத்தைத் தனது சொந்த நிலம் என்கிறான் எதிரி.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைத் தீவில் சிங்கள இனவாதிகள் ஆட்சிப்பீடம் ஏறிய காலத்திலிருந்து தமிழர் நிலம் விழுங்கப்பட்டு வருகிறது. தமிழர் நிலத்தை அபகரித்துச் சிங்கள மயமாக்குவது ஒரு புறமும், தமிழர் நிலத்தை ஆக்கிரமித்து, அதன் வளங்களை அழித்து, அங்கு வாழ்ந்த மக்களை அகதிகளாக்குவது இன்னொரு புறமுமாக, எமது நிலம் மீது கொடுமை நிகழ்ந்து வருகிறது. இந்த அநீதிக்கு எதிராகவே நாம் போராடுகிறோம். ஆகவே, சாராம்சத்தில் எமது விடுதலைப் போரானது ஒரு மண்மீட்புப் போராகும். எமக்குச் சொந்தமான நிலத்தை மீட்டு அந்த நிலத்தில் எமது ஆட்சியுரிமையை இறைமையை நிலைநாட்ட நடைபெறும் போர்.

இந்தப்போரின் நோக்கம், குறிக்கோள் என்ன என்பதை எமது மக்கள் இப்பொழுது நன்கு உணரத் தொடங்கியுள்ளனர். சொந்த நிலத்தை இழந்து, அந்த நிலத்தில் அமைந்த வாழ்வை இழந்து, அகதிகளாக அலையும் மக்களுக்குச் சொந்த மண்ணின் மகிமை புரியும். அந்த மண்ணில் ஆக்கிரமிப்புக் காலூன்றி நிற்கும் அந்நியனை விரட்ட வேண்டிய அவசியம் புரியும். இந்தப் புரிந்துணர்வால் ஏற்பட்ட விழிப்புணர்வு காரணமாகவே, இந்த மண் மீட்புப் போரில் எமது மக்கள் எமக்குப் பக்கபலமாக நின்று, பல்வேறு வழிகளில் பங்களித்து வருகிறார்கள். இன்று, எமது தேச விடுதலைப் போரானது விரிவடைந்து மக்கள் போராக வளர்ச்சியும், எழுச்சியும் பெற்றுவருகிறது.

எனது அன்பார்ந்த மக்களே,

ஆண்டு தோறும் எனது மாவீரர் நினைவுரையில் நான் சமாதானத்தையும், சமாதான வழியிலான அரசியற் தீர்வையும் வலியுறுத்தத் தவறவில்லை. அதேவேளை, சமாதானவழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சிங்களப் பேரினவாதம் தயாராக இல்லை என்பதையும் நான் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

சிங்களத்து அரசியலில் ஆதிக்கம் செலுத்தி, மாறி மாறி ஆட்சிப்பீடம் ஏறிவரும் இரு பிரதான சிங்களக் கட்சிகளும், சாராம்சத்தில் இனவாதக் கட்சிகளே, இவ்விரு கட்சிகளும் சிங்கள - பௌத்த பேரினவாத சித்தாந்தத்தில் வேரூன்றி வளர்ந்தவை. அந்த வெறிபிடித்த, தமிழ் விரோதச் சித்தாந்தத்தில் திளைத்தவை. கடந்த அரைநூற்றாண்டு காலத்திற்கு மேலாக தமிழினத்திற்கு எதிராக ஒடுக்குமுறையை முடுக்கிவிடுவதில் போட்டியிட்டு செயற்பட்டவை. இந்த இன ஒடுக்குதல் வரலாற்றில் என்றுமில்லாத வகையில் தமிழருக்குக் கொடுமை இழைத்த பெருமை சந்திரிகாவின் ஆட்சியையே சாரும்.

சந்திரிகாவின் ஐந்தாண்டு ஆட்சிக் காலம் தமிழினத்திற்கு ஒரு சாபக்கேடாக அமைந்தது. தொடர்ச்சியான போரும், வன்முறையும், சாவும் அழிவும், பசியும் பட்டினியும், இடப்பெயர்வுமாக இக் காலகட்டத்தில் எமது மக்கள் எதிர்கொண்ட பேரவலம் மிகக் கொடுமையானது. இருண்ட, இரத்தம் படிந்த வரலாற்றுப் பக்கங்களைக் கொண்டதாக சந்திரிகாவின் அடக்குமுறை ஆட்சிக் காலம் நீண்டது. இந்தக் கொடிய ஆட்சியானது தமிழினத்தின் தேசிய ஆன்மாவில் என்றும் அழியாத வடுவை ஏற்படுத்தியது.

உள்நாட்டில் தமிழருக்கு எதிராக ஒரு பயங்கரவாத ஆட்சியை நடத்திக்கொண்டு, வெளியுலகில் சமாதானம் விரும்பும் ஒரு சனநாயக தேவதையாக நாடகமாடினார் சந்திரிகா. தமிழர் தாயகத்தை முழுமையாக ஏப்பம்விடும் ஒரு நாசகாரப்போர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டு, அதனை ஒரு சமாதானத்திற்கான போர் முயற்சியாக வர்ணித்தார். முழு உலகமும் அவரை நம்பியது. அவரது சமாதானப் போருக்கு ஆதரவு வழங்கியது. முழு உலகத்தையும் கண்கட்டி ஏமாற்றிய அரசியல் பரப்புரை வித்தைகளில் தமிழினத்துரோகிகளே சந்திரிகாவுக்கு பக்கத்துணையாக நின்றனர்.

நாம் சந்திரிகாவை நம்பவில்லை. தமிழரின் தேசிய பிரச்சினையை நீதியான முறையில் தீர்த்துவைக்கும் நேர்மையும் உறுதிப்பாடும் அவரிடம் இருக்கவில்லை. சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் நவயுகப் பிரதிநிதியாகவே நாம் அவரைக் கண்டோம். எனவேதான், நாம் சந்திரிகா அரசுடன் நேரடியாகப் பேச்சுக்களை நடத்த விரும்பவில்லை. ஆயினும் நாம் சமாதானக் கதவுகளை மூடிவிடவில்லை. சர்வதேச சமூகத்தின் முன்னிலையில், மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்துடன் சமாதானப் பேச்சுக்களில் பங்குகொள்ள நாம் தயாராக இருப்பதாகச் சென்ற ஆண்டு மாவீரர் நினைவுரையில் நான் அறிவித்தேன்.

நாம் சர்வதேச மத்தியத்துவத்தை வேண்டியபோதும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஏற்றதான சமாதானப் புறநிலைகள் உருவாக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறினோம். போர் நெருக்கடி நீங்கிய நிலையில் இராணுவ ஆக்கிரமிப்பும், பொருளாதார நெருக்குவாரங்களும் அகன்ற ஒரு இயல்பான, நல்லெண்ண சூழ்நிலையில் பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என்பதை நாம் தெளிவாக விளக்கியிருந்தோம்.

சமாதானப் பேச்சுக்களுக்கு உகந்ததான ஒரு நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும் என்ற எமது யோசனையை சந்திரிகா அரசு ஏற்க மறுத்தது. போருக்கு ஓய்வு கொடுக்கவோ, நில ஆக்கிரமிப்பை நிறுத்தவோ, பொருளாதாரத் தடைகளை நீக்கவோ சந்திரிகா விரும்பவில்லை. போரையும் பொருளாதாரத் தடைகளையும் தமிழர் மீதான அரசியல் அழுத்தங்களாகப் பாவிக்கவே அரசு விரும்பியது.

'சமாதானத்திற்கான போர்' என்ற சந்திரிகா அரசின் கோட்பாடு ஒரு இராணுவத் தீர்வையே குறித்து நிற்கிறது. போர் மூலமாக தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, புலிகள் இயக்கத்தைத் தோற்கடித்து, தமிழினத்தை அடிமை கொள்வதே இத்திட்டமாகும். கடந்த ஐந்தாண்டு காலமாக இப்போர்த் திட்டத்தை செயற்படுத்தவே அவர் ஓயாது உழைத்தார். எத்தனையோ பேரழிவுகளைச் சந்தித்தபோதும் அவர் தனது இராணுவத் தீர்வுத் திட்டத்தைக் கைவிடவில்லை. இதனால் சமாதான வழிமுறைகள் பற்றியோ, சமாதானப் பேச்சுக்கள் பற்றியோ அவர் அக்கறையோடு சிந்திக்கவில்லை. அதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகள் எதையும் எடுக்கவில்லை.

போரைத் தொடர்ந்து நடத்தியவாறு, சில வரையறைகளுடன், இரகசியமாகப் பேச்சுக்களை நடத்தலாமென மூன்றாம் தரப்பு மூலமாகச் சந்திரிகா எமக்குத் தூது அனுப்பியிருந்தார். நாம் அந்த யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு புறம் போரை நடத்திக்கொண்டு, மறுபுறம் சமாதானப் பேச்சை நடத்துவது நடைமுறைச் சாத்தியமற்றது. அத்தோடு அபத்தமானதும்கூட. தொடரும் போரினால் எமது மக்கள் சாவையும், அழிவையும், அவலங்களையும் சந்தித்து நிற்க, நாம் எதிரியோடு கை கோர்த்து சமரசம் பேசுவது முடியாத காரியம். அத்துடன் எந்தவொரு நிபந்தனையோடும், காலவரையோடும் பேச்சுக்களை நடத்த நாம் தயாராக இல்லை. சந்திரிகா உண்மையில் சமாதானத்திற்காக அன்புக்கரம் நீட்டவில்லை. பேச்சு என்ற போர்வையில் ஒரு பொறியை வைக்க முயன்றார். நாம் அந்த சமாதானப்பொறிக்குள் சறுக்கிவிழத் தயாராக இல்லை.

கடலோரம் கட்டிய மண்வீட்டுக்கு நிகழ்ந்த கதிபோலச் சந்திரிகாவின் போர்த்திட்டத்தை விடுதலைப் புலிகளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'ஓயாத அலைகள்' அடித்துச்சென்றுள்ளது. இச்சமரில் நாம் ஈட்டிய மாபெரும் வெற்றியின் விளைவாக இராணுவ சமபலம் எமக்குச் சார்பாகத் திரும்பியிருக்கிறது. புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, இராணுவ மேலாதிக்க நிலையைப் பெற்றுவிடவேண்டுமென்ற சந்திரிகாவின் ஐந்தாண்டு கால பகீரத முயற்சியை நாம் ஒரு சில நாட்களில் முறியடித்துள்ளோம்.

ஆட்பலம், ஆயுதபலம், ஆன்மபலம், மக்கள்பலம் என்ற ரீதியில் சகல பலத்தோடும் நாம் வலுப்பெற்று நின்ற போதும், எமது தாயகத்தை மீட்டெடுக்கும் போரியல் சக்தி எம்மிடம் இருந்த போதும், நாம் சமாதானப் பாதையைக் கைவிடவில்லை. உயிரழிவையும் இரத்தக் களரியையும் தவிர்த்து, சமாதான வழியில், நாகரிகமான முறையில், தமிழரின் சிக்கலைத் தீர்க்கவே நாம் விரும்புகிறோம்.

சமாதானப் பேச்சுக்கள் ஒரு சமாதான நல்லெண்ணப் புறநிலையில் மூன்றாம்தரப்பு சர்வதேச மத்தியத்துவத்துடன் நடைபெறவேண்டும் என்பதையே நாம் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். சமாதானப் புறநிலை எனும்பொழுது போர் ஓய்ந்து, பொருளாதாரத் தடைகள் அகன்று, எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் படைகள் விலகிய ஒரு இயல்பு நிலையையே நாம் குறிக்கிறோம்.

போரையும், நில ஆக்கிரமிப்பையும், பொருளாதார நெருக்குவாரங்களையும் தமிழர் மீது அழுத்தம் செலுத்தும் உத்திகளாகப் பாவிப்பதை நாம் அனுமதிக்க முடியாது. எவ்வித புறநிலை அழுத்தங்களும் இல்லாத இயல்பு நிலையில் சமத்துவமும் புரிந்துணர்வும் நிலவும் நல்லெண்ண சூழ்நிலையில் பேசுவதையே நாம் விரும்புகிறோம்.

நாம் பேச்சுக்கான கதவைத் திறந்தபடி சிங்கள தேசத்திற்கு ஒரு நல்லெண்ண சமிக்ஞையைக் காட்டுகிறோம். ஆயினும் நாம் வேண்டுவது போன்று ஒரு சமாதான சூழ்நிலையை தோற்றுவிப்பதற்குச் சிங்கள அரசியற் தலைமைகள் இணங்கப் போவதில்லை என்பது எமக்குத் தெரியும். நீண்டகாலமாக கடைப்பிடித்துவரும் இராணுவ வன்முறைப் பாதையை சிங்கள இனவாதிகள் இலகுவில் கைவிடப்போவதில்லை என்பதும் எமக்குத் தெரியும். எனவே, சிங்கள அரசியற் தலைமைகளுடன் பேசி, இணக்கம் கண்டு, எமது தேசியச் சிக்கலுக்கு தீர்வுகாணலாமென நாம் கற்பனையில் வாழவில்லை.

மனித உரிமைகளை மதியாத சிங்கள இனவாத அரசியலும், அதன் தமிழர் விரோதப்போக்கும் தமிழ்மக்களுக்கு ஒரேயொரு மாற்று வழியையே திறந்து வைத்திருக்கிறது. அதுதான் போராடிப் பிரிந்துசென்று தனியரசை உருவாக்கும் ஒரே வழி. இந்த வழியில்தான் சிங்கள தேசம் தமிழினத்தை தள்ளிக்கொண்டிருக்கிறது.

சுதந்திர தமிழீழத் தனியரசே எமது தேசியப் பிரச்சினைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதை எமது மக்கள் எப்பொழுதோ தீர்மானித்து விட்டார்கள். எமது மக்களின் சுதந்திர அபிலாசையை சிலுவையாக தோளில் சுமந்து, இத்தனை ஆண்டுகளாக எமது இயக்கம் இரத்தம் சிந்திப் போராடி வருகிறது. இன்று, எமது சுதந்திரப் பயணத்தில், அந்த நீண்ட விடுதலை வரலாற்றில், ஒரு முக்கியமான திருப்பத்தை அடைந்து விட்டோம்.

எமது போராட்ட இலக்கு, ஒளிமயமான எதிர்காலமாக, எமது கண்களுக்குத் தெரிகிறது.

நாம் நம்பிக்கையுடன் எமது இலட்சியப் பயணத்தைத் தொடர்வோம்.

எமக்கு முன்னால் எழக்கூடிய எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நாம் நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்துசெல்வோம்.

நாம் ஒரே மக்கள் சக்தியாக, ஒன்றுபட்ட தேசமாக, ஒருமித்தெழுந்து, எமது இலட்சியப் பாதையில் விரைந்து செல்வோம்.

சாவைத் தழுவிய எமது வீரர்களின் ஆன்மாவாக சுதந்திரம் எமக்காக காத்துநிற்கிறது.

**'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'**

(வே. பிரபாகரன்)
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்

# உலகப்பரப்பில் தமிழீழ தேசிய மாவீரர் நாள்

தமிழீழ விடுதலைக்காய் தமது இன்னுயிரை அர்ப்பணித்துவிட்ட மாவீரர்களை நினைவுகூர்ந்து, வணக்கம் செலுத்துகின்ற தமிழீழதேசிய எழுச்சிநாள் ஆண்டுதோறும் தமிழீழத்தில் மாத்திரமல்ல, தமிழீழத்திற்கு வெளியிலும் தமிழர் வாழும் நாடுகளில் எல்லாம் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளன. உலக நாடுகளில் மக்கள் மத்தியில் தேசிய எழுச்சி பலம்பெற்றுவருவதையே இம்முறை மாவீரர்நாள் நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

## கனடாவில் முப்பதினாயிரம் மக்கள்.

இம்முறை, கனடாவில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்ச்சி, கனடாவாழ் தமிழ்மக்கள் மத்தியில், ஒரு வரலாறாகப் பதிந்துள்ளது. திரளும் மக்கள் தொகையைக் கருதி, ஒரேஇடத்தில் மூன்று தடவைகளாக மாவீரர் நாள் நிகழ்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. மூன்று நிகழ்ச்சிகளிலும் முப்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் கலந்துகொண்டனர். அங்கு சிறப்புரை வழங்கிய தமிழுணர்வாளர் திரு. சுப. வீரபாண்டியன் 'இது ஒரு நிகழ்ச்சியல்ல.. ஒரு வரலாறு நடந்துகொண்டிருக்கின்றது' எனக் குறிப்பிட்டதுபோல், வரலாற்றில் இடம்பிடிக்கும் விதமாய், பொதுமக்கள் நகைகள் பணம் என்பனவற்றை நாட்டு விடுதலைக்காய் அள்ளிவழங்கினர். நாட்டிற்கு வேலியமைக்க பத்துக்கும் மேற்பட்ட பெண்கள் தமது தாலிக்கொடிகளைக் கழற்றி வழங்கினர்.

## தென்னாபிரிக்காவில் எட்டாயிரம் மக்கள்.

கடந்தகாலங்களைப்போலல்லாது, இம்முறை பெருந்தொகையான தென்னாபிரிக்கத்தமிழ் மக்கள் கலந்துகொண்டு, தமிழீழ தேசிய மாவீரர்களுக்கு நினைவுவணக்கம் செலுத்தினர். டேபனில் உள்ள சட்வத் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற இவ் உணர்வுபூர்வமான எழுச்சிநாளில், எட்டாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கலந்துகொண்டனர்.

## ஜேர்மனியில் எட்டாயிரம் மக்கள்.

ஜேர்மனியில், எட்டாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு, தமது மாவீரர்களுக்கு நினைவு வணக்கம் செலுத்தினர். மண்டபம் நிறைந்து மக்கள் வெளியிலும் காத்திருந்தனர். உணர்வுடனும் எழுச்சியுடனும் கலந்துகொண்ட மக்கள், தாயகத்தை மீட்க பணம் நகைகளை மனமுவந்து வழங்கினர்.

## சுவிசில் ஏழாயிரம் மக்கள்.

சுவிஸ் பேர்ண் நகரில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில், ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் திரள் திரளாகவந்து கலந்துகொண்டனர். மண்டபம் நிறைந்துவழிய, ஒரேமக்கள் வெள்ளமாய் காட்சியளித்தது. பலமணிநேரம் வரிசையில் காத்திருந்து, தமிழீழ தேசிய பாதுகாப்பிற்கென, பெருந்தொகையான பணம் நகைகள் என்பனவற்றை மக்கள் மனமுவந்து அள்ளி வழங்கினர்.

## லண்டனில் ஏழாயிரம் மக்கள்.

லண்டனில் நடைபெற்ற மாவீரர்நாள் நிகழ்ச்சி லண்டன்வாழ் தமிழீழ மக்கள் மத்தியில், தேசிய எழுச்சி பலம்பெற்று வருவதற்கு ஒரு உதாரணம். என்றுமில்லாத வகையில் இம்முறை, ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் கலந்துகொண்டு, தமது தேசிய மாவீரர்களுக்கு நினைவு வணக்கம் செலுத்தினர். பெருந்தொகையான பொதுமக்கள், பணம் நகை என்பனவற்றை, தமது தேசத்தை மீட்டுப் பாதுகாக்க, மனமுவந்து அள்ளிவழங்கினர்.

## பிரான்சில் நாலாயிரத்து ஐநூறு மக்கள்.

இம்முறை பிரான்சில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுக்கு, பெருந்தொகையான மக்கள் திரண்டனர். மண்டபம் கொள்ளாத அளவில் திரண்ட மக்கள், தமது மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தினர். நாலாயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர். போரில் விழுப்புண் பெற்ற போராளிகளுக்காக மருத்துவநிதியும் சேகரிக்கப்பட்டது.

## இத்தாலியில் ஆயிரத்து எண்ணூறு மக்கள்.

இத்தாலியில் நடைபெற்ற மாவீரர்நாள் நிகழ்வில் ஆயிரத்து எண்ணூறுக்கும் மேற்பட்ட மக்கள் உணர்வுடன் கலந்துகொண்டனர். இத்தாலிய மக்களும் தமிழீழ மக்களுடன் கலந்துகொண்டு, தமிழீழ தேசிய மாவீரர்களுக்கு நினைவுவணக்கம் செலுத்தினர்.

## நெதர்லாந்தில் ஆயிரத்து ஐநூறு மக்கள்.

நெதர்லாந்தில் இம்முறை, ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு தமது தேசிய மாவீரர்களுக்கு நினைவுவணக்கம் செலுத்தினர். நிகழ்ச்சியின்போது ஏராளமான பொதுமக்கள், தமது நகைகள் பணம் என்பனவற்றை தேசமீட்புப் பணிக்கு மனமுவந்து வழங்கினர்.

## டென்மார்க்கில் ஆயிரத்து முன்னூறு மக்கள்.

டென்மார்க்கில் இடம்பெற்ற மாவீரர்நாள் நிகழ்வில், ஆயிரத்து முன்னூறுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். கடந்த காலங்களை விட அதிகளவுமக்கள் இம்முறை மாவீரர்நாள் நிகழ்வில் கலந்துகொண்டு தமிழீழ தேசியமாவீரருக்கு நினைவு வணக்கம் செலுத்தினர்.

## நோர்வேயில் ஆயிரத்து இருநூறு மக்கள்.

நோர்வே, ஒஸ்லோவில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் ஆயிரத்து இருநூறுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு, தமது மாவீரர்களுக்கு நினைவுவணக்கம் செலுத்தினர்.

## அவுஸ்திரேலியாவில் ஆயிரம் மக்கள்.


அவுஸ்திரேலியா மெல்பேண் நகரில், இடம்பெற்ற மாவீரர்நாள் நிகழ்வில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியின்போது, பெருமளவிலான மக்கள் மேடைக்குச் சென்று, தமிழீழ மருத்துவ உட்கட்டுமான நிதிக்கு, பெருமளவு பணம் நகைகளை வாரிவழங்கினர்.

## அமெரிக்காவில் ஆயிரக்கணக்கில் மக்கள்.

அமெரிக்காவில் பல இடங்களில் மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெற்றள்ளன. நியூயோர்க்கில் ஆயிரம்வரையிலான மக்கள் மாவீரர்நாள் நிகழ்வில் கலந்துகொண்டனர். கலிபோர்ணியாவில் நானூறுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.

அதேவேளை, முக்கியமான நகரங்களில் எல்லாம் மாவீரர்நினைவு விசேட பூசை வழிபாடுகளும், கூட்டங்களும் நடைபெற்றன. நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

உலக நாடுகளில் நடைபெற்ற மாவீரர்நாள் நிகழ்வுகளின்போது, தமிழகத்தில் இருந்து வருகை தந்திருந்த, தமிழுணர்வாளர்கள் திரு. சுப. வீரபாண்டியன், திரு. விடுதலை இராஜேந்திரன், மலேசியாவில் இருந்து வருகைதந்திருந்த தமிழுணர்வாளர் திரு. பழனி, ஆகியோர் சிறப்புரைகள் வழங்கினர். தமிழகத்தில் இருந்து வருகைதந்திருந்த இனஉணர்வுப் பாடகர் திரு. புஸ்பவனம் குப்புசாமி அவர்களும் அவரது துணைவியாரும் இணைந்து பல இடங்களில் இசைநிகழ்ச்சிகளை வழங்கினர். ■





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









***ஓயாத அலைகள் - 3 நடவடிக்கையில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களது விபரம் தற்போது கட்டம் கட்டமாக வெளியிடப்பட்டுள்ளது. வீரச்சாவடைந்தவர்களில் எமக்குக் கிடைக்கப் பெற்ற பெயர் விபரம்.***

01. லெப். செல்வத்தேவன் .
( பழனியாண்டி - விமலன் ,
புதுக்குடியிருப்பு . முல்லை மாவட்டம்)
02. புரட்சிமணி
( கந்தையா - அஜந்தன், யாழ்ப்பாணம்)
03. கப்டன். ஜீவராசா
( விஸ்வலிங்கம் - சசிக்குமார்,
யாழ்ப்பாணம்)
04. லெப். கீரன் அல்லது கரன்
( தருமு - செல்வம், வவுனியா )
05. இருதயன்
( கில்பேட் - சுதேசன், யாழ்ப்பாணம் )
06. இளையவன்
( கந்தசாமி - உதயசூரியன்,
யாழ்ப்பாணம்)
07. கீர்த்தனன்
( கைலாயபிள்ளை - ரஜனிகாந் ,
அம்பாறை )
08. இளநம்பி
( கார்த்திகேசு - விமலேந்திரன்,
மட்டக்களப்பு )
09. ரஜிதரன்
( சிவானந்தன் - நித்தியதரன்,
மட்டக்களப்பு )
10. ஸ்ரீமன்
( கிருஷ்ணன் - திருமால், மட்டக்களப்பு )
11. மேஜர் நியுட்டன் அல்லது இளையவன்
( தம்பிராசா - சபாநந்தன் ,
யாழ்ப்பாணம்)
12. ஆஷா அல்லது அறிவன்
( சிவசாந்தராசா - தவதாஸ் ,
யாழ்ப்பாணம்)
13. மேஜர் சாரங்கன்
( ஆறுமுகதாஸ் - ரஜீபன் ,
யாழ்ப்பாணம் )
14. லெப் நக்கீரன்
( யோகநாதன் - தவராசா , கிளிநொச்சி )
15. சுந்தரவேல்
( முருகமூர்த்தி - ஞானமோகன்,
மட்டக்களப்பு)
16. சுரேஷ்கரன்
( செல்லத்துரை - மகேந்திரராசா,
மட்டக்களப்பு)
17. ஜமுனாராசா
( கருணானந்தன் - சந்திரகுமார்,
மட்டக்களப்பு)
18. கதிரவன்
( மனோகரன் - மனோகரராஜ்,
மட்டக்களப்பு)
19. மதிநிலா
( தருமராசா - சர்மிளா, மட்டக்களப்பு )
20. வான்மலர் அல்லது கலைநிலா
( கணபதிப்பிள்ளை - தர்சினி,
யாழ்ப்பாணம்)
21. டியில் அல்லது கவி
( முத்துவேல் - மனோரஞ்சினி,
யாழ்ப்பாணம்)
22. கதிர்
( நாகராசா - ஜெயந்தினி, புதுக்குடியிருப்பு,
முல்லை)
23. கப்டன் வானன்
( கிருஷ்ணபிள்ளை - தர்மசீலன்,
யாழ்ப்பாணம்)
24. விஷ்ணு காந்தன்
( அமரசிங்கம் - சிவநாதன், அம்பாறை)
25. கோகுலமேனன்
( சண்முகம் - நீலமேனன், மட்டக்களப்பு)
26. சிவகுரு
( உமைநேசபிள்ளை - ரவீந்திரன்
மட்டக்களப்பு)
27. இசைமறவன்
(ராதா - ரவிராஜன், அம்பாறை)
28. மண்நிலா
( தங்கராசா - பாலயோகினி, வவுனியா)
29. சுடர்மகள்
( மயில்வாகனம் - பவானி, உடையார்
கட்டு, முல்லை)
30. சூசை
( சரவணமுத்து - சதீஸ், யாழ்ப்பாணம்)
31. வன்னன் அல்லது கனிமுகிலன்
( கந்தையா - ரகுசீலன் , யாழ்ப்பாணம் )
32. வெண்கவி
( பாலகிருஷ்ணன் - சிறீஸ்கந்தராணி,
யாழ்ப்பாணம்)
33. நவதேவன்
( தவராசா - சிவகுமார் , மட்டக்களப்பு)
34. அமுதா அல்லது கயல்
( அற்புதராசா - தயாளினி, ஒட்டுசுட்டான்)
35. அருள்நங்கை அல்லது துவாரகா
( செல்வராசா - நாகேஸ்வரி,
திருகோணமலை)
36. வளர்மதி
( திருச்செல்வம் - சசிகலா, மட்டக்களப்பு)
37. துர்க்கா
( துரைராஜா - கௌரி, யாழ்ப்பாணம்)
38. நிலா
( கந்தசாமி - ஜிட் ஒபேக்கா,
யாழ்ப்பாணம்)
39. சீர்முல்லை
( இராஜலிங்கம் - நவஜீவமலர்,
யாழ்ப்பாணம்)
40. மதியருவி அல்லது சங்கீதா
( சமதர்மராஜா - ஜீவனா, முல்லைத்தீவு)
41. நிலா
( நற்செல்வம் - வினிதா, வவுனிக்குளம்)
42. யாழ்மொழி
( பரராஜசிங்கம் - ராஜேஸ்வரி,
யாழ்ப்பாணம்)
43. வைகறை
( வீனஸ் ரவீந்திரன் - மஸ்நிலா,
யாழ்ப்பாணம்)
44. குமுதன்
( நடேசன் - சிவா, மட்டக்களப்பு )
45. செம்பரன்
( கிருஷ்ணபிள்ளை - ரவி, மட்டக்களப்பு)
46. பைந்தமிழ்
( கதிரவேல் - சந்திரவதனி,
நெடுங்கேணி)
47. காங்கேயன்
( ரத்தினசிங்கம் - அரசரெட்ணம்,
மட்டக்களப்பு)
48. அரங்கிஸன்
( கோவிந்தன் - ஜீவரெட்ணம்,
மட்டக்களப்பு )
49. வெற்றிவேந்தன்
( இராசதுரை - சிவகுருநாதன்,
திருகோணமலை)
50. நிகழ்மதி
( கிருஷ்ணசாமி - அஞ்சலாதேவி,
யாழ்ப்பாணம்)
51. லெப்.கேனல் ராகவன்
( சின்னையா - சுசீந்திரராஜா, வவுனியா)
52. 2ம் லெப் இசைவேந்தன்
( செல்வராசா - நிஷாந்தன்,
யாழ்ப்பாணம்)
53. குமரன்
( அன்ரனிராஜா - ரஞ்சித்குமார்,
கொழும்பு)
54. பார்வேந்தன் அல்லது இன்பராஜ்
( மகேஸ்வரராஜா - ஜெயரூபன்,
யாழ்ப்பாணம்)
55. நிலவழகன்
( சுப்பிரமணியம் - சசிரேகன்,
யாழ்ப்பாணம்)
56. குறிஞ்சிமணி
( அரியதாஸ் - குட்டிநாதன், மன்னார்)
57. புகழன்
( சோமசுந்தரம் - ரவிச்சந்திரன்,
பரந்தன்)
58. உதயன் அல்லது எழிற்கதிரோன்
( தனபாலசிங்கம் - சபேசன்,
யாழ்ப்பாணம்)
59. வினோதினி
( நடராசா - மைல்காந்தி, ஒட்டுசுட்டான்)
60. மரகதன் அல்லது வில்லியம்
(நிர்மலானந்தன் - சிவசங்கர்,
யாழ்ப்பாணம்)
61. நிலா
( சிவராத்திரி - திலகவதி, யாழ்ப்பாணம்)
62. கண்ணன் அல்லது இளவேந்தன்
( தங்கராசா - செந்தில்குமார்,
திருகோணமலை)
63. மாலா
( துரையப்பா - சிறிரஞ்சனி, வவுனியா)
64. நாயகன்
( துரைச்சாமி - லோகேந்திரன்,
மட்டக்களப்பு)
65. சஞ்சீவன்
( தியாகராஜா - ரவீந்திரராஜா,
யாழ்ப்பாணம்)
66. தமிழ்ப்பிரியன்
( பெருமாள் - விஜேந்திரகுமார்,
உடையார்கட்டு)
67. இளங்குமரன்
( கந்தசாமி - சர்வானந்தன்,
யாழ்ப்பாணம்)
68. திருக்குமரன்
( சந்திரராசா - யோகராசா, கண்டி)
69. தமிழ்நதி
(மதுரைவீரன் சிவலட்சுமி, மாங்குளம்)
70. புஸ்பலதா
(பாக்கியராசா மனோன்மணி
மட்டக்களப்பு)
71. அண்ணாநம்பி
(இராமன் ஜெயசீலன் மன்னார்)
72. நிலவழகி
(வேலு லீலாவதி மன்னார்)
73. சிகரதன் அல்லது சிகரவிழியன்
(சத்தியமூர்த்தி விவேகானந்தன்
அம்பாறை)
74. தர்ஷனி
(பாக்கியநாதன் ரஞ்சினி அம்பாறை)
75. ஆதங்கன்
முத்துமா கனேஸ்வரன்
வன்னிமாவட்டம்)
76. வல்லவன்
(செல்வரெத்தினம் சதீஸ்வரன்
யாழ்ப்பாணம்)
77. ஆரூரான்
(செல்லத்துரை பத்மரஞ்சன் கிளிநொச்சி)
78. மேஜர் அமலன்
(மயில்வாகனம் சுரேஸ் விஸ்வமடு)

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

79. அகன்
(மாசர் புஷ்பராணி யாழ்ப்பாணம்)

80. அகன் குயில்
(மாரிமுத்து வானபேவி யாழ்ப்பாணம்)

81. அருள்நிலா
(குமரகுருபரன் ஜெயரஞ்சினி யாழ்ப்பாணம்)

82. அகிலா
(அம்பிகைபாகன் சித்ரா யாழ்ப்பாணம்)

83. வேணி
(பொன்னம்பலம் தில்லை நடேஸ்வரி யாழ்ப்பாணம்)

84. சிட்டுக்கிளி
(பாலசுப்பிரமணியம் ஜெயலஷ்மி மாங்குளம்)

85. புதியவள் அல்லது அகமதி
(வடிவேல் ஜீவிதா கிளிநொச்சி)

86. யாழினி
(தங்கராஜா ராஜலஷ்மி கிளிநொச்சி)

87. குட்டியழகி
(அந்தோனிப்பிள்ளை பிரதீபா யாழ்ப்பாணம்)

88. சசி
(இராசரத்தினம் சுகந்தினி யாழ்ப்பாணம்)

89. அருளன்
(நந்தகோபாலன் துஷ்யந்தன் யாழ்ப்பாணம்)

90. கபிலன்
(சிதம்பரப்பிள்ளை ஜெயராசா திருமலை)

91. தங்கம்
(தேவராசா தேவரஞ்சினி வன்னேரிக்குளம்)

92. கப்ரன் மதிவதனன் அல்லது திருவருள்
(கோபால் இராமச்சந்திரன் கொழும்பு)

93. கலாதீபன்
(அன்னை பூபதி பவளானந்தன் மட்டக்களப்பு)

94. சர்வானந்தன்
(சின்னத்தம்பி ஜெகதீசன் மட்டக்களப்பு)

குறிப்பு ஒரு சிலருக்கு மட்டுமே தகுதி (நிலை) அறிவிக்கப்பட்டுள்ளது மற்றவர்களுக்கு தகுதிநிலை அறிவிக்க முன்னர் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

# மாவீரர் விபரம்

இது வரை வீரச்சாவடைந்த
ஆண் கரும்புலிகளின் மொத்த எண்ணிக்கை - 119
பெண் கரும்புலிகளின் மொத்த எண்ணிக்கை - 41

கரும்புலிகள் உட்பட 27- 11 - 1982 முதல் 20 - 11- 1999 வரை வீரச்சாவடைந்த மொத்த மாவீரர்களின் எண்ணிக்கை 14,355 ஆகும்.

இந்த 14,355 மாவீரர்களிலே 2,608 மாவீரர்கள் பெண் மாவீரர்களாவர். 11,747 பேர் ஆண் மாவீரர்களாவர்.

**ஆண்டுவாரியாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் எண்ணிக்கை.**

| | |
|---|---|
| 82ம் ஆண்டு | - 01 மாவீரர் |
| 83இல் | - 05 மாவீரர்கள் |
| 84இல் | - 36 மாவீரர்கள் |
| 85இல் | - 123 மாவீரர்கள் |
| 86இல் | - 238 மாவீரர்கள் |
| 87இல் | - 451 மாவீரர்கள் |
| 88இல் | - 363 மாவீரர்கள் |
| 89இல் | - 372 மாவீரர்கள் |
| 90இல் | - 960 மாவீரர்கள் |
| 91இல் | - 1613 மாவீரர்கள் |
| 92இல் | - 788 மாவீரர்கள் |
| 93இல் | - 925 மாவீரர்கள் |
| 94இல் | - 374 மாவீரர்கள் |
| 95இல் | - 1503 மாவீரர்கள் |
| 96இல் | - 1374 மாவீரர்கள் |
| 97இல் | - 2101 மாவீரர்கள் |
| 98இல் | - 1788 மாவீரர்கள் |
| 99இல் | - 1044 மாவீரர்கள் |
| ஏனையோர் | - 146 |
| தனிக்குழு | - 10 பேர் |

தமிழீழ விடுதலைப் போரில் இது வரையில் வீரச்சாவைத்தழுவிக் கொண்ட மாவீரர் எண்ணிக்கையினை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

**27.11.1982 தொடக்கம் 20.11.1999 வரைக்கும் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களின் மொத்த எண்ணிக்கை சில முகாம் தகர்ப்புக்கள், இராணுவ நடவடிக்கையில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் எண்ணிக்கை இதோ:**

| | |
|---|---|
| ஆகாய, கடல், வெளிச்சமர் | - 604 போராளிகள் |
| மணலாற்றுச்சமர் | - 233 போராளிகள் |
| தவளைப் பாய்ச்சல் நடவடிக்கை | - 460 போராளிகள் |
| கொக்குத்தொடுவாய் | - 175 போராளிகள் |
| இடி முழக்கம் | - 181 போராளிகள் |
| சூரிய கதிர் | - 438 போராளிகள் |
| ஓயாத அலைகள் - 1 | - 315 போராளிகள் |
| சத்ஜய - 2 | - 100 போராளிகள் |
| சத்ஜய - 3 | - 133 போராளிகள் |
| பரந்தன் - ஆனையிறவு | - 193 போராளிகள் |
| பரந்தன் - கிளிநொச்சி ஊடுருவித்தாக்குதல் | - 300 போராளிகள் |
| வவுணதீவு | - 103 போராளிகள் |
| ஓயாத அலைகள் - 2 | - 403 போராளிகள் |
| ஜயசிக்குறுய் எதிர்ச்சமர் | - 2146 போராளிகள் |
| ஓயாத அலைகள் -3ல் 20 . 11. 1999 வரை | - 179 போராளிகள் |

**இது வரை வீரச்சாவடைந்த கரும்புலிகள்**

| | |
|---|---|
| ஆண் தரைக் கரும்புலிகள் | - 49 |
| பெண் தரைக் கரும்புலிகள் | - 10 |
| ஆண் கடற் கரும்புலிகள் | - 70 |
| பெண் கடற் கரும்புலிகள் | - 31 |



# நடுகல்

கார்த்திகைத் திங்கள் கடும் குளிர்வாடை
வீசுங் காலம் மாசில் ஒருநாள்
பண்டைத் தோன்றிய தண்டமிழ் மரபின்
மாலை இட்டு மலர்கள் தூவி
நெய்விளக் கேற்றி பெய்ம் மழை அன்ன
விழிநீர் ஒழுக பலர் நின்று தொழூஉம்
இவையே, ஞாலம் வியக்கத் தாயகம் மீட்கப்
பாசறை கலங்கள், பகையொரு வளங்கள்
என்றிவை சிதைய என்றிய சினத்தில்
வெடியொடுசென்று வெடித்து வீழ்ந்தும்
அறத்தற்நாம் என்றவர் முகத்திரை கிழிய
மென்முறை வழியில் உண்ணாது நோற்றுத்
தம்முயிர் ஈந்தும் செம்மையில் தெவ்வர்
கையகப்படாது மரபு காக்க
நஞ்சினை உண்டு நல்லுமிர் விட்டும்
வெஞ்சமர் ஆடிக் களத்திடை விழ்ந்தும்
மாண்ட கரும்புலி மறவர் பெயரும்
ஈண்டவர் ஈட்டிய பெருமையும் அன்னார்
வாழும் ஊரும் வீழ்ந்த
நாளும் எழுதிய நடுகல் தாமே.

-பண்டிதர் வீ. பரந்தாமன்-

www.tamilarangam.net





# கிராமத்தின் இரவுகள்

-துஷியந்தன்-

இரவு ஒன்பது மணி இருக்கும் நகரின் பொலிஸ் இராணுவ கூட்டு முகாமிலிருந்து இராணுவ வாகன அணி ஒன்று பிரதான வீதியினூடாக கிளம்பின. பின் இடது பக்கமாக உள்ள பாதையில் திரும்பி ஊருக்குள் நகரத் தொடங்கியது. அச்சம் குடியேறி இருந்த அந்தப் பிரதேசத்தில் அன்றைய நிலவு அவசியமற்றதாக அதேசமயம் பயங்கரமானதாக காய்ந்தது.

சுமார் பதின்நான்கு வரையிலான வாகனங்கள் இரச்சலை முடிந்த வரை கட்டுப்படுத்தி நகர்ந்து கொண்டிருந்தன. மண் பாதை ஊடாக நிலவு வெளிச்சத்தில் அந்த வாகன அணியின் நகர்வு தூரத்தில் வயல்களில் காவல் காக்கும் கமக்காரர்கள் சிலருக்கு நன்றாகவே தெரிந்தது. பனை வெளிகளினூடாக அவை உயிர் குடிக்கும் விஷப்பாம்பொன்றின் குரூரமாய் அருவருப்பாய் ஊர்ந்து கொண்டிருந்தன. வயற்சிறு குடில்களில் நின்றவர்கள் விளக்குகளை அணைத்து விட்டு ஒடினர்.

◇ ◇

ஊருக்குள்ளிருந்த அந்த வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அடுப்பில் அந்த நேரத்தில் இடியப்பம் அவிந்து கொண்டிருந்தது. "கனகம்மாக்கா" என்று அந்த ஊரவரால் அழைக்கப்படும் கனகம்மா அடுப்படியில் இருந்து அடுப்புக்குள் மேலும் பல விறகுச் சுள்ளிகளை வைத்து எரியூட்டிக் கொண்டிருந்தாள். அவளின் பதின்நான்கு வயது மகள் வீட்டு முற்றத்தில் காதுகளை கூர்மையாக்கிக் கொண்டிருந்தாள் வயலில் தண்ணீர்பாச்சி விட்டு படுக்க ஆயத்தமான மகன், வந்திருந்த அந்த இளைஞனோடு பாயில் உட்கார்ந்து கதைத்துக் கொண்டிருந்தான்.

வந்திருந்த அந்த இளைஞனுக்கு இருபத்தொரு வயதிருக்கும். சாரமும் சேட்டும் அணிந்திருந்தான், இடுப்பில் ஏதோ சொருகி வைத்திருந்தான், பசளைப் பையிற்குள் துப்பாக்கியொன்றை வைத்து கட்டியிருந்தான். புழுதிபடிந்த உடை முழங்கையில் ஒரு சிறியகாயம். கண்கள் பஞ்சடைந்து போயிருந்தன. இரண்டு மூன்று நாட்கள் சாப்பிடாமல் இருந்திருப்பானோ--? இருக்கும், இல்லாவிட்டால் அந்த இரவில் வீட்டைத்தட்டி 'அம்மா சாப்பிட ஏதும் தாருங்கோ' என்று கேட்டிருக்க மாட்டான்.

அவ்வாறான இரவுகளில் கனகம்மாவின் வீட்டிற்கு இவ்வாறான இளைஞர்கள் சிற்சில நேரங்களில் வருவதும் அவர்களுக்கு அவள் சாப்பாடு கொடுப்பதும் வழக்கம் தான். அவர்கள் அறிமுகமானவர்களாக இருந்தனர் அந்த ஊரில் இருந்து இயக்கத்திற்குப் போனவர்கள். "அவர்கள் சாப்பாடு என்று வாய் விட்டுக் கோட்பதில்லை" அவர்கள் வரும் போது கனகம்மாவிற்கு விளங்கும். முகம் மலர்ந்து உணவளிப்பாள்.

ஆனால் இவன் அந்த ஊர் இளைஞனல்ல அறிமுகமில்லாதவன். அவன் வாய் திறந்து கேட்டதும் கனகம்மாவிற்கு மனதுக்குள் ஏதோ செய்தது எட்டு மணிக்கே சாப்பாடு முடிந்து சட்டி பானைகள் காலியாகி விட்டன எனினும் "தம்பி வாங்கோ ஐந்து நிமிசத்தில் இடியப்பம் அவிச்சிடுவன்" என்று சொல்லிவிட்டு அவசர அவசரமாக அடுப்படியில் இயங்கினாள்.

இடியப்பத்திற்கு மேலாக ஆவி பறந்தது, மனம் திருப்தியுற்றவளாய் இரண்டு முட்டைகளை உடைத்துப் பொரிக்க ஆயத்தமாக மகள் உள்ளே ஓடிவந்தாள்.

"அம்மா தூரத்தில் ஏதோ இரைச்சல் கேட்குது" தாயின் காதுக்குள் கிசுகிசுத்தாள்.

வடிவா ஒருக்கா காதைகுடுத்துக் கேள் அது வேறு ஏதும் சத்தமாயிருக்கும், எனக்கெண்டால் ஒன்றும் கேக்கேல்ல. பாவம் அந்த பிள்ளை நீ சத்தம் போட்டு சாப்பாட்டை குழப்பி விட்டுடாதை இடியப்பம் அவிஞ்சிட்டுது இரண்டு நிமிசத்தில முட்டை பொரிஞ்சுடும்.

மகள் மீண்டும் வெளியே வந்து காதுகளை கூர்மையாக்கிக் கொண்டாள். தூரத்தில் நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டது, வாகன இரைச்சல்கள் ஒன்றும் கேட்கவில்லை. மகளின் மனம் அமைதியுற்றது.

◇ ◇

வயல் வெளிகளை அண்டியிருந்த சிறு பற்றைகள் நிரம்பிய வெளியொன்றில், வாகன அணி நிறுத்தப்பட்டது அந்த அணியின் தலைவன் சிப்பாய்களை அழைத்து கட்டளையிட்டான் அதன்படி அந்த வாகனங்கள் அந்தப்பற்றை வெளிக்குள் நிறுத்தப் பட்டன.

> **வேலிக்கரையில் பூவரசமரம் ஒன்றுடன் மறைந்து நின்ற கனகம்மாவின் மகன் தன்னருகே இராணுவம் வருவதைக்கண்டான். மரத்தின்மேலே அந்தப் போராளி இளைஞன் ஏறி மறைந்திருந்தான். அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து ஆண்கள் அனைவரும் கைகள் கட்டப்பட்ட நிலையில் கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருந்தனர். தான் ஒளிப்பதிவைக் கண்டால் தனக்கு உயிராபத்துவரும் அதேநேரம் மரத்தின் மேலே இருக்கும் போராளிக்கும் ஆபத்து நேரலாம் என்பதை உணர்ந்த கனகம்மாவின் மகன் தனது சட்டையைக் கழற்றி கைகளில் கட்டப்பட்டது போல் சுற்றிக் கொண்டு ஆண்கள் கூட்டத்தில் கலந்து கொண்டான்**

ஒரு குழு அந்த வாகனங்களை பாதுகாத்து நிற்க ஏனையோர் பாதையின் இரு புறமாகவும் நடந்து குடியிருப்புக்கள் அண்மிக்க இருபுறம் இன்னும் பிரிந்து வேலிகளைக் கடந்து சென்றனர். நிழலுருவங்களாக அசைந்தசைந்து நகர்ந்து பின் தவழ்ந்து முன்னேறியது.

அந்த இளைஞன் சாப்பிடுவதைப் பார்த்துக்கொண்டு நின்ற கனகம்மாவுக்கு விழிகளில் நீர் தழும்பியது. மனம் நிரம்பிற்று. தம்பி அந்த பையை அங்கால வைச்சிட்டு ஆறுதலாகச் சாப்பிடுங்கோ பிள்ளையை மடியில வைச்சிருக்கிற மாதிரி வைச்சிருக்கிறியள்.

இளைஞன் சிரித்தான் "இது தானம்மா எங்கடை உயிர்" என்று கனகம்மாவிடம் சொல்லிவிட்டு மேலும் புன்னகைத்தான்.

நாய்களின் குரைப்பு அதிகரித்தது மிகவும் அருகே கேட்டது என்ன நாய்கள் கடுமையாகக் குரைக்குதுகள் என்றவாறு கனகம்மாவின் மகள் வெளியயே செல்ல அந்த இளைஞனும் சாப்பிடுவதை அரைவாசியோடு நிறுத்திவிட்டு வெளியே வந்து பார்த்தான் கனகம்மா முற்றத்தில் நின்று சுற்று முற்றும் பார்த்தாள் அவளின் மகனும் சற்று தூரத்திற் சென்று ஒழுங்கைப் பக்கமாக பார்த்துக் கொண்டிருந்தான். கனகம்மாவின் மகள் வீட்டுக்குள் சென்று சாப்பாட்டை எடுத்து குசுனிக்குள் கொண்டு போய் வைத்தாள். பசளைப்பையை எடுத்துச் சென்று ஒரு ஓரமாக வைத்தாள். ஒரு முன்னெச்சரிக்கையுடன் தவிர அடுத்த கணம் நடக்கப்போவதை அவளோ மற்றவர்களோ எதிர்பார்த்திருக்கவில்லை.

வளவுக்குள் கரியமிருகங்கள் சுற்றிவளைத்து நின்றன. அருகிலிருந்த எல்லா வளவுகளிலும் இராணுவம் நின்றிருந்தது. வீடுகள் யாவும் சுற்றிவளைக்கப்பட்டன.



கனகம்மா வீட்டில் புகுந்த ஐந்து சிப்பாய்கள் உள்ளே சென்று நோட்டமிட்டனர்.

கனகம்மா நடுங்கிக் கொண்டிருந்தாள். அவளின் கையை நன்றாக பற்றியவாறு மகள் அவளோடு ஒட்டிக்கொண்டிருந்தாள்.

சிப்பாய்கள் சிங்களத்திலும் அரைகுறைத் தமிழிலும் மிரட்டினார்கள். அவர்களின் முகங்களை பார்க்கவே பயமாக இருந்தது. வீட்டிற்குள் சகல பொருட்களையும் தட்டிக்கொட்டினார்கள். குசினிக்குள் சட்டி பானைகளையும் ஆராய்ந்தார்கள். ஒருவன் கனகம்மாவின் மகளின் முகத்திற்கு டோர்ச் அடித்துப் பார்த்தான். அவள் நடுங்கிய படி நின்றாள். பசளைபாக் சுற்றிவைக்கப்பட்ட பாயின் அருகே ஒருவன் போனான் அவளுக்கு இதயம் நின்றுவிடும் போலிருந்தது. உடல் ஒருகணம் வெப்பமாகி பின் குளிர்ந்து சில்லிட்டது.

வெளியே நின்று சிப்பாய் ஒருவன் சத்தமிட அவர்கள் ஐவரும் சடசடவென்று வெளியே ஓடினர். கனகம்மாவும் மகளும் விறைத்துப் போய் கீழே சரிந்து உட்கார்ந்தனர் - வேலிக்கரையில் பூவரசமரம் ஒன்றுடன் மறைந்து நின்ற கனகம்மாவின் மகன் தன்னருகே இராணுவம் வருவதைக் கண்டான். மரத்தின் மேலே அந்தப் போராளி இளைஞன் ஏறிமறைந்து இருந்தான். அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து ஆண்கள் அனைவரும் கைகள் கட்டப்பட்ட நிலையில் கொண்டு செல்லப் பட்டுக் கொண்டிருந்தனர். தான் ஒளித்திருப்பதைக் கண்டால் உயிராபத்து வரும். அதே நேரம் மரத்தின் மேலே இருக்கும் போராளிக்கும் ஆபத்து நேரலாம் என்பதை உணர்ந்த கனகம்மாவின் மகன் தனது சட்டையைக் கழற்றி கைகளில் கட்டப்பட்டது போல் சுற்றிக்கொண்டு இருளினூடே பதுங்கிச்சென்று கொண்டு செல்லப்படும் ஆண்கள் கூட்டத்தில் கலந்து கொண்டான்.

முன்பும் சில நாட்களில் பகல் நேரங்களிலும் இரவுகளிலும் இராணுவம் வீடுகளிலுள்ள ஆண்களை முகாமுக்கு கொண்டு சென்று விசாரணை செய்த பின் பிரஜைகள் குழுவினூடாக விடுதலை செய்வது வழக்கம் இதில் பழக்கப்பட்ட அந்த மக்கள் பதற்றமடைந்தனராயினும் சிறிது அமைதியாக இருந்தனர். எனினும் அன்றிரவு வாகனங்களின் சத்தமின்றி பதுங்கிப் பதுங்கி இராணுவம் வந்தமை அம் மக்களுக்கு திகிலான ஒரு அனுபவத்தைக் கொடுத்தது.

மந்தைக் கூட்டம் போல் திடுதிடுவென சிப்பாய்கள் நடந்து செல்லும் சத்தம் ஓய்ந்ததும், கனகம்மா வெளியே வந்து நோட்டமிட்டடாள் பின் பாய்க்குள்ளிருந்த "பசளைப்பை" யை எடுத்துக் கொண்டு வளவிற்குவெளியே வந்தாள். ஒருஉருவம் அருகே வந்தது திடுக்கிட்டாள் அது போராளி இளைஞன். அவன் அதனை வாங்கிக் கொண்டு பதில் சொல்லக்கூட நேரமின்றி இருளோடு இருளாக மறைந்து சென்றான்.

◇ ◇


பற்றை வெளியில் நின்ற வாகன அணியின் சில வாகனங்கள் முகாமை நோக்கி நகர ஏனையவை சிப்பாய்களின் வருகைக்காகக் காத்து நின்றன. கவச வாகனம் ஒன்று சற்று முன்னே சென்றுகொண்டிருந்தது.

நடந்து கொண்டிருந்த சிப்பாய்கள் ஏதோ திடீரென சுறுசுறுப்பாயினார் "சடக் சடக்" என அவர்களின் துப்பாக்கிகள் ஆயத்தமாகின. வாக்கிரோக்கி செய்தி அவர்களுக்கு வந்து சேர்ந்ததும் ஆவேசமுற்றனர். அவர்களின் துப்பாக்கிகள் பிடித்துச் சென்றவர்களின் பக்கம் திரும்பின. அந்த மனிதர்களது விழிகள் வியப்பால் விரிந்தன. குரல் வெளிக்கிட மறுத்து சிக்கின. ஏன்? ஏன்....? இனப்படு கொலைக்கு கராணங்கள் தேவையில்லை.

அந்தப் பின்னிரவில் வேட்டொலிகள் கேட்டு அந்தக் கணத்தில் அந்தக் கிராமம் நடுங்கிற்று. அந்த ஊரில் பல குழந்தைகள் தங்கள் தந்தைமாரை இழந்தன. பல பெண்கள் விதவைகள் ஆயினர், பல பெற்றோர்கள் ஆண் குழந்தைகளை பறிகொடுத்தனர். ஆனால், அந் நேரம் அது அவர்களுக்கு தெரியவரவில்லை.

அவர்கள் எப்போது விடியும் என எதிர்பார்த்திருந்தனர். விடிந்ததும் பிரஜைகள் குழுவிடம் முறைப்பாடு கொடுக்க வேண்டும். கொண்டு செல்லப்பட்டவர்களை மீட்டு வரவேண்டும் என இரவு முழுவதும் கொட்டக் கொட்ட விழித்தவாறு இருந்தனர். சிறு பிள்ளைகளும் காத்திருந்தனர். இருள் விலகாத அதிகாலை அடுத்த ஊர் ஆட்கள் கனகம்மாவின் ஊருக்கு வந்து கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே கைகள் கட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் உயிரற்றுக் கிடந்த அந்த உடல்களின் உறவினருக்கு தகவல் சொல்வதற்காக அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள்.

கனகம்மாவின் வீட்டிற்கும்தான். துயரம் இவ்வாறான துயரம் அக்கிராமத்தில் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஆயினும் கிராமம் இறந்து போகவில்லை. அது உயிர்ப்புடனேயே வாழ்ந்தது இரவுகளில் விழித்திருந்தது அடுப்புகள் எரிந்து கொண்டிருந்தன. ■





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

*அன்புச் சகோதரர்களே*

அடிமை இருள் கவிந்த வானின்
விடுதலை ஒளிக்கற்றைகள்
நாம் சுதந்திரக் காற்றை சுவாசிப்பதற்காக
தம் சுவாசத்தை நிறுத்திக் கொண்ட புனிதர்கள்
தேசம் வாழத் தம் தேகத்தை சிதைத்த உத்தமர்கள்
இன்றைய உலகில் எங்குமேயில்லை எங்கள் மாவீரர்க்கு நிகரான மாமனிதர்கள்
இவர்களால் எங்கள் நானூறு ஆண்டுகால வரலாற்றில் மீண்டும் விடுதலையின் வசந்தம்
ஆதலால் இவர்கள் பெயர் சொல்லி எழுந்து நிற்கின்றது தமிழீழ தேசம் மாவீரர் நாளன்று
மாவீரர் நாள் மரணமுற்ற மனிதர்களின் நினைவுநாளல்ல
மரணத்தை வென்ற மாமனிதர்களை காணும் பொன்நாள்

அவர்கள் எப்படி மரணத்தை வென்றனர்
அவர்கள் எப்படி என்றும் உயிர் வாழ்கின்றனர்
நீ எதுவாக நினைக்கின்றாயோ அதுவாவாய் என்பது வேதமொழி

இவர்கள் சுதந்திரக் காற்றாக விரும்பினர்
அதற்காக பயங்கரப் புயலாக எழுந்தனர்
அந்தப் புயலில் சிங்களத்து அடக்கு முறைகள் தூள்தூளாகியது
அந்த ஊழிக்காற்றில் சிங்களப் படைகள் அனைத்தையும் இழந்தன
இந்தப் புவியில் காற்று உள்ளவரை மாவீரர்கள் சுதந்திரக் காற்றாக வலம்வருவர்
தமிழீழ தேசத்தின் சுதந்திரமூச்சினை அடக்க நினைக்கும் எவருக்கும் எமனாக வாழ்ந்திருப்பர்

சுதந்திரத்தை பிறப்பிக்கும் பிறப்பாக்கிகளாகத் தம்மை மாற்றினர் இவர்கள்
எதிரி பல்லாயிரமாக எழுந்து வருவதைக் கண்டு இவர்கள் வெகுண்டதில்லை
ஆயிரம் விதமான ஆயுதங்கள் எதிர் முழங்கினாலும் இவர்கள் சுதந்திர உணர்வு அணைந்ததில்லை.
இதனால் தான் எதிரிக்கு இவர்களது உயிர்களை இவர்கள் உடம்பில் இருந்து பிரிக்க தெரிந்ததே தவிர
இவர்களில் ஒருவரைக் கூட அழிக்க முடியவில்லை.
ஒருவன் உறுதியின் உறைவிடமாகையில் ஓராயிரம் உறுதிமொழிகளின் ஓசையாக அவன் மாறுகின்றான்
ஒருவன் மாவீரர் ஆகையிலே அவன் பல்லாயிரம் போராளிகளைப் படைக்கின்ற தெய்வமாகின்றான்
தெய்வத்தை தேடியலையும் மனிதகுலம் நனவுலகில் தெய்வத்தைப் பார்க்க விரும்பின்
இதோ எங்கள் மாவீரர்கள் மனிதகுலத்தின் மகத்துவங்கள்

ஆம்! நமது மாவீரர்கள் தெய்வங்கள்தான்
சத்தியமே தெய்வமென்றால் நம் மாவீரர்கள் சத்தியத்தின் இவ்வுலக தரிசனங்கள்
தர்மத்தைக் காக்க அவதரிப்பது தெய்வமென்றால் நம் மாவீரர்கள் தர்மபுத்திரர்கள்
நான் என்ற அகந்தையை அழிப்பவன் தெய்வநிலை எய்துகின்றானென்றால்
தன்னையே நாங்களாக கண்டவர்கள் நம் மாவீரர்கள்.
தான் வாழாது தன் சமுதாயத்தை வாழவைத்த பெருந்தகைகள் மாவீரர்கள் – நம் தெய்வங்கள்
வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்தில் வைக்கப்படும் என்பது வள்ளுவமென்றால்
தமிழீழத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த நம் மாவீரர்கள் வானுறையும் தெய்வங்களே வணங்குகிறோம்

குற்றங்களை அழிக்கும் தீச்சுடரை சிவனாரின் நெற்றிக் கண்ணில் தேடிய தமிழர்கள்
தேசத் தலைவர் பிரபாகரன் மூட்டிய விடுதலைப் பெருநெருப்பின் தீப்பொறிகள் மாவீரர்கள்
தமிழருக்கு குற்றம் செய்பவரை சுட்டெரித்த நிஜ வரலாற்றை கண்டு அவர்களை வணங்குகின்றார்கள்.
மாவீரத் தீப் பொறி ஒன்றிலிருந்து விடுதலை சுமக்கும் ஊழித்தீக்களாக பல்லாயிரம் விடுதலைப் புலிகள்
இது கனவுலகின் கற்பனை பிதற்றலல்ல
நனவுலகின் அற்புதங்கள் தமிழீழ விடுதலை வரலாற்றின் வனப்புக்கள்

சந்தனத்திற்கு அருகிருக்கும் கட்டையும் சந்தன மணம் வீசுவது போல்
மாவீரர் வாழ்ந்த பூமியில் வாழும் ஒவ்வொருவரிலும் விடுதலைப் பேரார்வம்
மாவீரர்கள் விட்டுச் சென்ற ஆயுதத்தை மறுபடி ஏந்துவதில்தான் எத்தனை போட்டி
அவர்கள் பணியினை தொடர்வதில்தான் எத்துணை ஆர்வத்துடன் மக்கள் பங்களிப்பு
மாவீரர்கள் சந்ததிகள் தரையிலும் கடலிலும் போராளிகளாய்
கரும்புலி வீரர்களாய் வீறு நடையிடுகையில்
வன்னியில் சிங்களப்படை திரும்பிப்பாராது ஓடுவது விந்தையல்ல
விரைவாக இந்த நிலை தமிழீழமெங்கும் வரப்போகிறது என்பதற்கு அச்சவாரம்
மணலாறு வன்னி மன்னார் களமுனை வெற்றிகள்!
பல்லாயிரம் ஆட்பலிகொடுத்து பலகோடி பொருள்செலவுடனே பிடித்த பகுதிகளை
ஐந்தே நாளில் வெற்றி கொண்டு இருபத்தி நாலு நாட்களாக களமாடும் விடுதலைப் புலிகள்
தேசத்தலைவர் பிரபாகரனின் ஆற்றல்மிகு தலைமைக்கு வலுச்சேர்க்கும் மானிட சக்திகள்
மாவீரர் நினைவினிலே தமிழீழத் தாயகத்தின் கடைசி அங்குலத்தை
மீட்கும் வரை போராடப்புறப்பட்ட வீரமறவர்கள்
வன்னி, மணலாறு, ஓமந்தை, மன்னார்
1999இன் மாவீரர் நாளுக்கு வெற்றிப் படையல்கள்

புதிய ஆயிரம் ஆண்டினை வரவேற்பதில் உலகம்,
புதிய ஆயிரம் தொடங்கு முன் மாவீரர் கனவை நனவாக்கும் வேகத்தில் அவர் வழிவந்த போராளிகள்
அது சாத்தியமே பாருங்கள் உலகத்தவரே என்கிறது வன்னி முதல் மன்னார் வரை மணலாறு ஈறாக
சரிந்து விழுந்து கிடக்கும் சிங்கள முகாங்களில் பறந்த சிங்கக் கொடிகள்
மீட்கப்பட்ட பிரதேசமெங்கும் பறக்கும் நம் தமிழீழத் தேசியக் கொடி அழைக்கிறது உலகத்தை
வாருங்கள் வந்து பாருங்கள் எம் வெற்றிக் காட்சிகளை
வாருங்கள் வந்து பார்த்து கூறுங்கள் எம் மண்ணை மக்களை சிங்களவர் படுத்தியுள்ள பாடுகளையன்றே
கூவியழைக்கின்றார் புலம்பெயர் தமிழர்கள் உலக சமுதாயத்தை
இனியும் ஒரு நாடென்ற பேச்சுக்கு இடமில்லை
போதும் காலனித்துவம் எங்கள் கால்களில் பூட்டிய ஒற்றை ஆட்சியின் கொடுமைகள்

எங்கள் தாயகத்தை மீளமைக்கும் புனிதப் பணியில்
நம்மையும் நாமிணைத்தலே மாவீரருக்கு நாம் செய்யும் வீரவணக்கமாகும்
எப்படி நாம் புலம்பெயர் தமிழர் போராட்டத்தில் இணைந்திடலாம்
நம்மவரே விடுதலைப் புலிகள் நம் வீட்டுச் சொந்தங்கள் அவர்கள் என உரக்கக் கூவிடுவோம்
எங்கள் தாயக யதார்த்த செய்திகளை உலகிற்கு எடுத்துச் சொல்லிடுவோம்
தத்தளிக்கும் நம் பாதிக்கப்பட்ட தமிழீழ உடன் பிறப்புக்களுக்கு புனர் வாழ்வு காட்டிடுவோம்
தரைமட்டமாக்கப்பட்ட எங்கள் தமிழீழத் தேசத்தினை கட்டியெழுப்பிட கூடி உதவிடுவோம்
சிங்கள ஆக்கிரமிப்பாளர்களை ஓடவிரட்டிட அள்ளிக் கொடுத்து ஆதரவு அளித்திடுவோம்
வெற்றியால் துள்ளிக் குதியாது கடைசி அங்குல நிலம் விடுபடும் வரை கடும் உழைப்பை நல்கிடுவோம்
எங்கள் தேசத் தலைவன் மேதகு பிரபாகரன் ஆணை தலைமேற்கொண்டு வாழும் மக்கள் நாமென்று உலகிற்கு காட்டிடுவோம்.
தமிழீழம் வெல்லும் என்னும் ஆன்ம பலத்துடன் களமாடும் நம்மவர் ஆட்பலம் ஆயுதபலம் பேணிட உதவும் மக்கள் பலமாக நாம் இலங்கிடுவோம்.

வணக்கம்
அன்பின் ஆசிரியர்
(09.12.1999)

# மண்ணின் தாய்மை!



விடுதலைக் குழந்தைக்கு ஏங்கி
தவித்தது மண் மடி.
மண்ணின் ஏக்கம் உணர்ந்து
நெகிழ்ந்தார்கள் மண்ணின் மனிதர்கள்.

குருதியிறைத்துக் குருதியிறைத்து
உயிரணுக்களானார்கள் மண்ணின்
மனிதர்கள்.
மண்ணின் மடி கனக்க
அதன் கருப்பையில்
உயிரணுக்கள் பள்ளிகொண்டன.
விடுலைச் சிசுவை சிருஷ்டிக்கும்
உயிரணுக்கள்!

உயிரணுக்களை ஏந்தி ஏந்தி
விடுலையைக் கருத்தரித்தது மண்.
சினையுற்ற விடுதலைக்கு உரமூட்ட
விடுதலையின் கருவறைக்கு
ஓயாமல் விரைகின்றன உயிரணுக்கள்.

மண்ணின் வாளிப்பான தேகம்
விடுதலை சூல்கொண்ட பூரிப்பில்
சிவக்கிறது.
மண்ணின் கருப்பையில்
விடுதலைச் சிசு அசைகிறது.
தாய்மையில் புளகித்து சிலிர்க்கிறது
மண்.

மலர்களின் நறுமணத்தையும்
தீபங்களின் சுடரொளியையும்
ஆலயமணிகளின் நாத ஒலியையும்
காற்றில் செலுத்தி
உயிரணுக்களின் கருணையைப்
பாடுகிறார்கள்
மண்ணின் மனிதர்கள்.

–எஸ். உமாஜிப்ரான்–

www.tamilarangam.net



# உன் வசமாகும் உலகு

காற்று நடக்கிறது கைவீசி
பால் நிலவு
பூத்துக் கிடக்கின்றது பாலைப்பொழிந்தபடி.
நேற்றிரவைப்போல நெடுங்கேணி குலுங்கிறது.
தூரத்தேயிடிக்கும் சுடுகுண்டின் அதிர்வினுக்கே
ஈரக்குடல் வற்றி இறுகிறது.
நெஞ்சுக்குள்
ஏதோ திரண்டு எழும்மூச்சை அடைக்கிறது.
சேதாரமாச்சா எம் திருவாழ்வு?
கைப்பிடிக்குள்
மலர்ந்திருந்த வாழ்வின் மகிமை
வேரறுந்து
தளர்ந்துளதா இன்று?
சாவேயெம் நர்ளாந்தம்
என்றாச்சா?
எமையிந்த இடரேன் தொடர்கிறது?
குன்றாய் நிமிர்ந்த குலமிடிந்து
பள்ளத்தில்
வீழும்படியான வதியேன் கனிந்துளது?
பாழுமிருள் விலக்கும் பரிதி
எம் வானத்தில்
ஏனின்னும் வந்து எழவில்லை?
எம் தலையில்
மானத்துக்கணியும் மகுடமேன் கிட்டவில்லை?
வேறொன்றுமில்லை,
விடுதலையின் மீதெமக்கு
ஆறாத காதல் அரும்பவில்லை,
அவதரித்த,
தாய் நிலத்தின் மீது தனியன்பு பெருகவில்லை
தீயுண்ட நெஞ்சம் சினம்கொண்டு சீறவில்லை,
போத்தலடைத்த புனலாய்,
நேற்றிரவு
கூத்து முடிந்த கூத்தரங்காய்
பேசாமற்
போர்த்துக் கிடக்கின்றோம்; புது வாழ்வு கைவருமா?
வாராது· காணும்
வல்லமைக்குத் திலகமிட்டுப்
போராட வேண்டும்
புறப்படும் – ஒய்...
ஏன் காணும்
வானத்தரசன் வந்திறங்கி எம்கையில்
தானமென விடுதலையைத் தருவானா?
நாமேதான்
எழுந்தெமக்கெதிரான எதையும் சரித்துவிடும்
பலத்தோடெழுந்து பகைவிழுத்த வேண்டும் காண்,

அஞ்சாமை,
ஆற்றல்,
அடங்கா வலு,
வாழ்வைப்
பஞ்சைப்போலெண்ணும் பக்குவம் இவைவேண்டும்.
நம்பிக்கை வேண்டும்
நாளை நமக்கென்னும்
தெம்பெமக்கு வேண்டும்,
துணிவென்னும் பலமுடைய
தும்பிக்கை வேண்டும்.
தொடர்ந்தலைக்கும் துயரிருளைக்
கண்டு சிரிக்கின்ற கனிவான மனம் வேண்டும்.
தொண்டு தொழும்பறியாச் சுடரொளியாய்
எந்நாளும்
நடக்கும் பலம் வேண்டும்.
நடுவழியில் விட்டகலாப்
புடைக்கும் தோள் வேண்டும்
பிறகெல்லாம் உன்வசமே.

-புதுவை இரத்தினதுரை-



## மடுவில் சிறீலங்காவால் கொல்லப்பட்ட எமது சகோதரர்களுக்கு எமது இதய அஞ்சலிகள்

"களத்தில்" சார்பாக மடுத்திருப்பதியில் தமிழ்ச் சிறுவர்கள் 13 பேர் உட்பட 44 இடம் பெயர்ந்த தமிழ்மக்கள் கொல்லப்பட்ட துயர சம்பவத்திற்கும் கோவில் எறிகணையால் சேதமாக்கப்பட்டமைக்கும் எமது ஆழ்ந்த கவலையையும் அதிருப்தியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் இந்த யுத்த சூன்யப்பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கை மேற்கொண்ட சிறீலங்காவின் இத் தாக்குதல் சர்வதேச யுத்தக்குற்றச் செயலாக கருதப்பட்டு சர்வதேச அமைப்புக்களால் அது குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் சார்பாக நாம் சர்வதேச உலகினை வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றோம். இது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள உத்தியோகபூர்வ அறிக்கையில் தாம் இத் தாக்குதல்களுக்கு எந்தவிதத்திலும் பொறுப்பாளிகள் இல்லை என வன்மையாக மறுத்துள்ளதுடன் சிறீலங்கா அரசாங்கமே இதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளமையை இங்கு சுட்டிக்காட்ட விரும்பும் நாம் சர்வதேச தகவல் தொடர்பு சாதனங்கள் மனித உரிமை அமைப்புக்கள் மடுத்திருப்பதிக்கு சென்று உண்மையை உலகிற்கு உணர்த்த வேண்டுமென வலியுறுத்த விரும்புகின்றோம். நவாலி புனித பீற்றர் ஆலயத்தில் அகதிகள் சிறீலங்கா படைகளினால் குண்டுவீசி கொல்லப்பட்டமைக்கு சர்வதேச சமூகம் போதிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியமையினாலேயே இவ்வாறு ஆலயங்களில் தஞ்சமடையும் தமிழ் அகதிகள் அநியாயமாக உயிரிழக்கும் சம்பவங்கள் தொடர்கதையாகின்றது என்பது தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தாக உள்ளது.

எனவே இனிமேலும் இவ்விதமான இனஅழிப்புக்கள் இடம்பெறாதவாறு உலக அமைப்புக்கள் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றோம். 450 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட இத்திருத்தலம் ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச கலாச்சார சின்னமாக போற்றப்படும் தகைமையுடையது. இந்த திருக்கோவிலை அழிக்கக் கூடிய வகையில் நடத்தப்பட்ட இத்தாக்குதலால் திருஇருதயநாதர் பக்க ஆலயம் தகர்க்கப்பட்டுள்ளமை சர்வதேச கலாச்சார சின்னங்களை அழிக்கும் சர்வதேச குற்றச்செயலாக கருதப்படவேண்டிய ஒன்று. மடுச் சம்பவமானது ஆன்மீக கலாச்சார ரீதியாகவும் சிறீலங்கா தமிழர்களைத் தனது குடிகளாக கருதவில்லை என்பதை உலகிற்கு தெட்டத் தெளிவாக்கியுள்ளது. இந்நிலையில் சுதந்திர தமிழீழத் தேசத்திலேயே தாங்கள் பாதுகாப்பான அமைதியாக வாழ முடியுமென்ற தமிழீழ மக்களின் கருத்தை உலகு கவனத்தில் எடுத்தாலே இனிமேல் இத்தகைய துயர வரலாறுகள் தமிழீழ மக்களுக்கு ஏற்படாது என்பது புலம்பெயர் தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தாக உள்ளது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

இந்த துயரமான நேரத்தில் சம்பவத்தினால் தங்கள் உற்றாரை உறவினரை இழந்து தவிக்கும் அனைவருக்கும் குறிப்பாக தங்கள் பிஞ்சுக் குழந்தைகளை பறிகொடுத்து தவிக்கும் பெற்றோருக்கும் புலம்பெயர் தமிழர்களாகிய நாம் எமது ஆழ்ந்த கவலையை தெரிவிக்கின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்